சந்தாதாரரின் கவனத்திற்கு :
காவலன்
வருட சந்தா ரூபா 9-00
6 மாத ,, ,, 4-50
3 மாத ,, ,, 2-25
(தபாற் செலவு உட்பட)

# காவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
செய்தித்தாளாகப் பதிவுபெற்றது.

19—10—69
விசுவாச ஒளிபரப்பும் திருப்பணிக்கு அணிவகுப்போம் வாரீர்!

94-ம் புத். | 1969-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 40-ம் இல.

மறை பரப்பு ஞாயிறு சிறப்பிதழ்

# உலக சமாதானத்திற்காகச் செபமாலை

**திருச்செபமாலை வழியாக பரிசுத்த கன்னிமரியம்மாளின் சகாயத்தை உண்மையான உலக சமாதானத்துக்காக வேண்டும்பொருட்டு பரி. தந்தை விடுத்த நிருபத்திலுள்ள சிலகுறிப்புகள்.**

ஐப்பசி மாதத்தின் வருகை, கத்தோலிக்கரின் பக்திக்குரியதும் இன்றைய இடைஞ்சல் இக்கட்டுகள் மத்தியில் தனது முக்கியத்துவத்தைச் சற்றும் இழக்காததுமான ஒரு செபவடிவை ஓதும் வழக்கத்தை மேற்கொள்ளும்படிக்கு சகல கிறிஸ்துவ மக்களையும் அழைப்பதற்கு ஒரு சந்தர்ப்பமளிக்கின்றது. நாம் குறிப்பிடுவது பரிசுத்த கன்னிமரியம்மாளின் திருச் செபமாலையையேயாம்.

எம் புதல்வருக்கும் புதல்வியருக்கும் இவ்வருடம் நாம் குறிப்பாகச் சொல்லவிரும்பிய கருத்து என்னவெனில், மக்கள் மத்தியிலும், பல்வேறு நாட்டினர் மத்தியிலும் சமாதானம் நிலவவேண்டும் என்பதே. ஏனெனில், முன்னெப்போதும் இருந்ததைவிட இப்போது அது அவசரமாயும் முக்கியமாயுமுள்ளது. சிறிதளவு முற்னேற்றமும் நம்பிக்கையும் தோன்றியிருப்பினும் பயங்கரமான போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன; புதியஇடங்களில் மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன; ஒரே அன்பின் நற்செய்தியைப் பின்பற்றும் கிறிஸ்துவர்கள் தன்னும் ஒருவரோடொருவர் முரண்பட்டு நிற்கின்

[ தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க ]

## கிறீஸ்துநாதர் எங்கே இருக்கிறார்?

● தேவ நற்கருணையில்
● திருச்சபையில் ● வறியவரில்

கருதினல் லெர்காரோ அண்மையில் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் கிறிஸ்துநாதரைக் காணவேண்டில் நாம் அவரை எங்கே காணலாம் என விளக்கியருளினர். அவர் கூறியதாவது:

● "இது என் சரீரம்" என்று கிறிஸ்துநாதர் கூறியிருப்பதால், தேவ நற்கருணையில் அவரது உண்மையான பிரசன்னத்தைக் காண்கிறோம்.

● உங்களுக்குச் செவி கொடுக்கிறவன் எமக்குச் செவி கொடுக்கிறன் எனக் கூறியபோது அவர் திருச்சபையில் இருக்கிறார் என்பதை உணர்கிறோம்.

● "நான் பசியாய் இருந்தேன்......" எனக்கூறியபோது வறியவர்கள் துன்பப்படுகிறவர்கள் ரூபமாக நம்முடன் இருக்கிறார் என்பது தெளிவாகின்றது.

## ஸ்பெயின் தேச திருச்சபை

சென்றபல ஆண்டுகளாக ஸ்பெயின் தேசத் திருச்சபை அத்தேச அதிபராகிய ஜெனறல் பிறங்கோவுக்கு முழு ஆதரவும் கொடுத்து வந்துள்ளது: ஆனல் வருங்காலத்தில் இத்தகைய ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்க முடியாத நிலைமை வளர்ந்து வருகின்றது. அரசாங்க நிறுவனங்களின் மூலம் மக்களுக்குச் சமூகசேவை செய்வதிலும் திருச்சபையின் பாரம்பரியத்தின் படி உள்ள நிலையங்கள் மூலம் செய்வது சிறந்ததெனக் கருதப் படுவது இம்மாற்றத்துக்குக் காரணமெனக் கருதப் படுகின்றது.

## 23-ம் அருளப்பர் தபால் முத்திரை

23ஆம் அருளப்ப பாப்பரசரின் புன்னகை பூத்தமுகத்தை வரிசையாகக் கொண்ட தபால் முத்திரை இம்மாத முடிவில் வெளியிட மேற்கு ஜேர்மனிதேச அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது.

## ஒரு புதுத் திருச்சபையை உண்டாக்க ஒருவராலும் முடியாது

சென்றவாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் அளித்த பகிரங்க பேட்டியில், திருச்சபையில் தீவிரமான மாற்றங்களைப் புகுத்த எண்ணும் சிலர் ஒரு புதுத் திருச்சபையைஉண்டாக்க விரும்புவதாகத் தோற்றுகின்றது எனக்கூறி, அப்போக்கை வன்மையாகக் கண்டித்தார். "தங்கள் தங்கள் மனப் போக்குக்கும், சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும் தக்கதாகத் திருச்சபையில் மாற்றங்களைப் புகுத்திவிட முயற்சிப்பது பிழையாகும்" என அவர்களுக்குப் புத்திகூறினர்.

## 83 வயதில் புதிய பாடங்கள்


இங்கிலாந்து தேசத்தில் பேர்க்கன் ஹெட் எனும் இடத்தில் தமது 83ஆம் வயுதில் திரு சாமுவெல் குக் என்னும் பெரியார் ஒரு தர்மவேலையில் ஈடுபடுவதற்காக "தட்டெழுத்து"ப் பயிற்சி பெற ஒரு கலாசாலையை நாடி இருக்கின்ருர். அதுபயின்று முடிந்ததும் சித்திரம்வரையும் பயிற்சியையும் பெற இருக்கின்ருர், இவர் ஓய்வுபெற்று இருக்கும் ஓர் உத்தியோகஸ்தராயினும் தனது ஓய்வுநேரங்கள்யாவையும் 80 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர் சாலையின் நன்மைக்காகச் செலவு செய்கின்ருர். அவர் புதிதாகப் படிக்கும் தட்டெழுத்துப் பயிற்சியும் சித்திரக் கலைப்பயிற்சியும் இவ்வயோதிபர்சாலையில் உள்ளவர்களைப் படிப்பிப்பதற்காகவேயாம்.

## கரு. கூறே பயணமானர்

வத்திக்கானில் இம்மா 11ஆம் திகதி ஆரம்பமான சிநொட் சபையில் பங்கு பெறுவதற்காக எமது நாட்டு மேற்றிராணிமாரின் சார்பாகக் கருதினல் கூறே சென்றவாரம் வத்திக்கானுக்குப் பிரயாணமானர். கூறே அடி எமது நாட்டுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் பான்மையிலே மறுநாடுகளின் மேற்றிராணிமார் சபைகளின் பிரதிநிதிகளாகச் சில மேற்றிராணிமார்கள் வத்திக்கானுக்குச் சென்றிருக்கின்றனர். இத்தகைய மேற்றிராணிமாரின் சிநொட்சபை சரித்திரத்திலே இரண்டாம் முறையாகக் கூடுகின்றது. பாப்பரசருக்கு அவரது பரிபாலன வேலையில் துணை செய்துவரும் பல கியூறியா சபைகள் இருக்கத் தக்கதாக 6வது சின்னப்பப் பாப்பரசர் மேற்றிராணிமாரின் சிநொட் சபையை சில வருடங்களுக்கு ஒருமுறை கூட்டி வருகின்ருர். வத்திக்கானுக்கு அப்பாலிருக்கும் நாடுகளின் நிலைமையை நன்கறிவதற்குச் சிநொட் சபை அவசியமெனப் பரி. தந்தை உணர்கின்ருர்.

ஏன் இந்த

# அவசரம்?




சொல்லுகிறேன்...

## இன்று மறைபரப்பு ஞாயிறு

எனது காணிக்கையை நேரத்தோடு கொடுக்கப்போகிறேன்.

உமது காணிக்கையைக் கொடுத்து விட்டீரா?

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசுவாசப் பரம்புதல் சபையின் வித்து

அவனியை ஆட்கொண்ட ஆண்டவன் கிறீஸ்து, தம் அரிய பணியை என்றும் புரிய அவனியில் அமைத்த அரும் சபையே திருச்சபை: "மூளையிலே களையினல்லால் நனிவர வாய்த்தப்போ நவியமும் மடியும்" என உணர்ந்து, குளவியாம் திருச்சபையை மூளையிலேகளைய களைத்து எழுந்தான் கயவன் நீரோ! எத்தனை இன்னல் — அதில் இன்பம்! மட்டற்ற தடைகள் — அதிலும் மகிழ்ச்சி! எவ்வளவு எதிர்ப்புகள்! அனைத்தையும் தாண்டித் தாண்டவமாடினுள் கட்டிளங்குமரி திருச்சபை: குமரியாம் திருச்சபை குன்றும்போது. ஊக்கமும் ஆக்கமும் ஊட்ட நலமும், நன்மையும் நவில, ஊக்கமிக்க உண்மை வீரர்களை! வன்மைமிக்க வைரக்கற்களை!! திரமிக்க திருச்சபைத் தூண்களை!!! இன்ப இறைவன் இத்தரையில் ஈயாமல் விடவில்லை.

**இருமலர்கள் :**

சிறியவரைக் கொண்டு அரியவற்றை ஆற்றும் ஆண்டவன் கிறீஸ்துவின் அளப்பரிய செயலுக்குக் கருவியாயினர் இருவர்: அவ் இரு உருவங்களும் பணம் படைத்தவரல்லர்—பாமரர்! அனைத்தும் உணர்ந்த அறிஞர்களல்லர் — அறிவிலிகள்!! ஆற்றல் மிக்கவரல்லர்— ஆக்கம் குன்றியவர்கள்!!! இளங்குமரி வளரவேண்டும், ஆக்கமும் அழகும் பெற வேண்டுமென்று ஆண்டவன் அழைத்த அவ் அரிய உருவங்களுக்கு— உள்ளங்களுக்கு— உரியவர்கள் வேறுயாருமல்ல, 'பிலேயாசும்' 'பவுலின் ஜாரிக்கோ'வுமே:

**சின்னமலர் :**

இச் சிறுமலர் இல்லை 'பவுலின் ஜாரிக்கோ 1799-ம் வருடம் ஆடித்திங்கள் இருபத்திரண்டாம் திகதி 'லையன்ஸ்' நகரத்தில் பிறந்தாள். 'பிலேயாஸ்' 'பவுலின் ஜாரிக்கோ' வின் உடன்பிறந்த உத்தம அண்ணன். இருவரும் தம் இள இதயங்களை இளமையிலேயே இறைவனை நோக்கி எழுப்பினர். இறைவனுக்காக உழைக்க, கிறீஸ்துவை உலகெங்கும் போதிக்கத் தலைப்பட்டனர். பாவம்! நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறில்லை. பிலேயாஸ் குருமடம் நோக்கி விறுநடை போட்டான். பாவம்! பவுலின் வீட்டிலிருக்க வேண்டிய நிலை உருவாகியது!

**திருவிளையாடல் :**

வயது — அது ஒரு காட்டாறு. அது தன்னை அறியாமல் ஏதேதோ செய்துவிடுகிறது. அக்காட்டாறு பவுலின்ஜாரிக்கோவுடனும் விளையாடித் தவறவில்லை; வயது என்னும் காட்டாறு ஜாரிக்கோவை காதல் என்னும் கனித் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றது. ஜாரிக்கோ காதல் தடாகத்தில் இறங்கினுள். குளித்தாள், மூழ்கினுள், மூக்குளித்தாள். அதில் தோல்வி அவளை அரவணைத்தது. அப்போதுதான் உலகம் மாய்யை என்பது தெரிந்தது அவளுக்கு. அத்துடன் "உலக வாழ்வு" என்னும் அத்தியாயத்தை புரட்டிவிட்டு, "இறைவன் பணி" என்னும் அத்தியாயத்தை எடுத்து. அதில் அடையாளப் படத்தை வைத்தாள்.

**புதுமலர் :**

புனித வாழ்வு ஆரம்பித்தாள், நாளும் நாளும் புண்ணிய வாழ்வில் புத்துணர்ச்சி புகுந்தது. இச்சந்தர்ப்பத்தில் வேதபோதகத்திற்கு தன்னுல் என்ன செய்யலாம் என்று சிந்தித்தாள், திட்டமும் உருவாகியது. தன் திட்டத்தை கிரியாஸ் என்ற குருவிடம் தெரிவித்தாள். அவர் அவளை ஊக்குவிக்கத் தவறவில்லை— தளரவில்லை. அவள் திட்டம் "விசுவாசப் பரம்புதல்சபை" என்னும் பட்டத்துடன் சிறகடித்தது—பறக்கவும் முனைந்தது. 1822-ம் வருடம் வைகாசி மாதம் மூன்றும் நாளில் 7-ம்பத்திநாதர் என்னும் பாப்பிறை இச்சபையை ஆசித்தார்—போஷித்தார்: 1823-ம் வருடம் ஜாரிக்கோவின் அண்ணன் பிலேயாஸ் இறைவனின் குருவாக உருவானுர்

— சி. ஏ. செல்வராசா —

**குளவிப்பருவ விசுவாசப் பரம்புதல்சபை நிர்வாகம்:**

முதலில் பத்துப்பேர் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது: இப்பத்துப் பேரும் ஒரு வாரத்திற்கு மூன்றுசதம் பெறுமதியுள்ள நாணயத்தை தம் குழுத்தலைவரிடம் கொடுக்க வேண்டும். இதுபோன்று நூற்றுக் கணக்கான குழுக்கள் ஏற்பட்டது. நூறு குழுவுக்கு ஒரு பொதுத் தலைவர் வீதம் ஏற்படுத்தப்பட்டார்கள்: இத்தலைவர்கள் பணத்தை வசூலித்து ஜாரிக்கோவிடம் ஒப்படைப்பார்கள்: இவ் இனிய பணியை இன்பமுடன் ஆற்றியவர் இளநங்கையரே. இவ்வாறு சேர்க்கப்பட்ட பணம் பிலேயாசுக்கு அனுப்பப்பட்டது. பிலேயாஸ் பணத்தைப் பிரித்து வேதபோதக வேலைசெய்யும் குருக்களுக்கு அனுப்புவார். பிலேயாஸ் தன் தங்கையின் தளரா ஊக்கத்தை மெச்சினுர். இச்சபையில் ஆண்களையும் சேர்க்க உதவினுர். ஆண்களும் சேர்ந்தனர்: ஆர்வமுடன் உழைத்தனர்: "விசுவாசப் பரம்புதல் சபை" என்னும் பெயர் கொண்ட சிட்டு பட்டெனப் பறந்தது பட்டணமெல்லாம். லையன்ஸ் நகரமெல்லாம் இச்சபை பரவியது. இத்தனைக்கும் இடுக்கண் படாது இன்பமுடன் உழைத்த ஜாரிக்கோவுக்கு கிடைத்தது பயித்தியம் என்னும் பரிசும்—பட்டமும். கேவலம், பிழைக்கத்தெரிந்த பிச்சைக்காரி பிழைக்கும்வழியைப் பாருங்கள் என்று எள்ளிநகையாடினர். ஒரு பிச்சைக்காரன் ஜாரிக்கோவைப்பார்த்து, "ஏ லோபி, பணப்பேய் பிடித்தவளே பணத்தையெல்லாம் திரட்டிவைத்துக்கொண்டு, ஏழைகளுக்கு ஒரு சல்லி கொடுக்காத கல்நெஞ்சக்காரி." இவ்வாறு வசைமொழிகளை வாரி இறைத்தனர் வன்நெஞ்சர்கள். இத்தனை இன்னலையும் இன்பமுடன் ஏற்றுக்கொண்டாள், உருக்கு உள்ளம்படைத்த ஜாரிக்கோ. நாட்கள் நகரநகர இவ் இயக்கம் விருத்தியடைந்தது: ஜாரிக்கோ அதற்கு இட்ட சிறுவிதை முளைத்து, தளிர்விட்டு, கிளைவிட்டு, பூத்துக் காய்த்து, கனிநல்க ஆரம்பித்தது: தானுகவே பயன் கொடுக்கத் தொடங்கியபின் ஜாரிக்கோவுக்கு என்ன வேலை: ரோமைக்குச் சென்று, பாப்பரசரைச் சந்தித்து அடிக்கடி பேசினுள். ஒரு துறவற சபையை நிறுவ எண்ணி அதற்கான கருமங்களைமேற்கொண்டாள்: இச்சந்தர்ப்பத்தில் கடினநோயால் பீடிக்கப்பட்டு வருந்தினுள். "விசுவாசப் பரம்புதல்சபை" நிர்வாகம் திறமையுடன் நடைபெற்றது திருச்சபையால். ஆண்டவன் ஆசியைப் பெற்ற இப்பெண்—வீராங்கனை—தன் ஓட்டத்தை முடித்தாள்: நல்லயுத்தம் செய்தாள். உண்மையுடன் உழைத்தாள். இனி தனக்காக ஆயத்தம் செய்யப்பட்ட கிரீடத்தைப்பெற வேண்டியதுதான் பாக்கி: ஆம் அதைப்பெற 1862-ம் வருடம் தைத்திங்கள் ஒன்பதாம் திகதி வியாழக்கிழமை காலை ஆறுமணிக்கு புறப்பட்டுப் போனுள் ஜாரிக்கோ.

ஒரு பெண்ணுல் இடப்பட்ட இவ்விதை இப்போது இனிய பயனை நல்கிறது சிறிது மாற்றத்துடன். இது பயன் கொடுக்கிறது சிறிது மாற்றத்துடன். வளர்ந்து வருகிறதுபுதுத்திருப்பத்தில். அன்புள்ள சகோதரமே!

உலகில் கத்தோலிக்கர் தொகை எவ்வளவு குறைவாக உள்ளது? அதுவளர வேண்டுமென்று உனக்கு விருப்பமில்லையா?? நம் கிறீஸ்தவசமூகம் செழித்து வளர நீ என்ன செய்கிருய்??? உன்னைச்சுற்றி எத்தனை புறமதத்தினர்! அவர்களையெல்லாம் எம்மறையில்—மந்தையில் சேர்க்க உனக்கு விருப்பமில்லையா? அல்லது ஆர்வமில்லையா? ஆதரவில்லையா??

---

✠

## நினைவு கூருவோம்

**சவிரியாச்சி இம்மனுவேல்—இந்திரா இம்மனுவேல்**

**17—10—64.**

வில்வத்த கோர விபத்தில் சிக்கி மறைந்த

**5-ம் வருட ஞாபகம்**

**நினைவு**

ஓடியே சென்ற ஆண்டுகள் ஐந்தும்
உம்முகம் என்றும் எம்முன்னே நிற்கும்
காலமோ கடந்து காற்ருய்ப் போயினும்
கவலையோ விட்டகன்றிலதையோ
துன்தீதில் மூழ்கி துயருறுகின்ருேம்
துன்புறுவரையும் நினைந்திடச் செய்யும்

நித்திய ஒளி இவர்கள்மேல் ஒளிர்வதாக.

இவர்கள் மறைவால் துயருறும் பிதா, மக்கள், மைத்துனர், பேரப்பிள்ளைகள்.

* * *

**திரு. ஜே. அருள் பெல்டாஞே**

பேசாலை

**முதல் வருட மரணஞாபகம்**

பிறப்பு : 8—5—1908

இறப்பு : 25—10—1968.

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் என்றும் மறவோம்.

இவ்வுலகை விட்டுப் பிரிந்தும், எங்கள் மனதில் நின்றும் நீங்காத அருள் பெல்டாஞே அவர்கள் மறைந்து 1-வது ஆண்டு இம்மாதம் 25-10-69-ல் நிறைவுறுவதால் அன்றுகாலை 6மணிக்கு அர்ச். வெற்றிநாயகி ஆலயத்தில் துக்கற் பாடற்பூசை நடைபெறும். இதனைக் கண்ணுறும் உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாய் வேண்டுகிருேம்.

முடிவில்லாத பிரகாசம் இவருக்கு பிரகாசிக்கக்கடவது. இவரின் பிரிவால் துயருறும் நேசமனைவி: அ. ஞாசியா ஞேஸ், பிள்ளைகள்: அன்ரன், லீன்ஸ், கிறிஸ்ரி, கொன்ஸி, யெசி. பேசாலை.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

**வழக்கு இல. M. B. 8478.**

மானிப்பாய் கட்டுடை

(1) V. M. சோமாஸ்கந்தரும் (2) மனைவி அம்பிகாதேவியும் —வழக்காளிகள்.

எதிராக, சண்டிக்குளி 8, சுவாட்ஸ் ஒழுங்கை.

(1) சுவாம்பிள்ளை புண்ணியசிங்கம் ஞானப்பிரகாசமும்
(2) மனைவி ஞானரத்தினமும் —எதிராளிகள்.

M. B. 8478-ம் இலக்கவழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1969-ம்ஆல் நவம்பர் (கார்த்திகை) மீ 25-ந்உ (25-11-69) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அவ்வாதனத்துள்நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,406. மேலும் 5,000 ரூபாவுக்கு 26-9-66 தொடக்கம் 21-5-68 வரைக்கும் வருடமொன்றுக்கு 11%வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும் கோட்டுச்செலவு 491ரூபா 40சதமும். இதில் 450ரூபா குறைய பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூர்இறை, "திருக்கி தோட்டமும், கோயிற்புலமும், திருக்கிதோட்டமும்," நிலப்பரப்பு 4, குளிகள் 15 இதில் மேற்குப்பக்கமாக நிலப்பரப்பு 2உம், கிணறும், பயிர்களும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளுமானஇது அளவையாளர் J- மனுவலால் 16-4-50-ல் தயாரிக்கப்பட்ட 498ஆம் இலக்கபடத்தில் லொட் 1எனக் காட்டப்பெற்ற இவ்வாதனத்துக்கு எல்லை: கிழக்கு—M. செவஸ்தியானுக்கும் மனைவி மேரி யோசேப்பைனுக்குமுரிய சொல்லப்பட்ட படத்தில் லொட் 2 வடக்கு—அந்தோனிப்பிள்ளை பஸ்தியாம்பிள்ளையின் ஆதனம். மேற்கு—ஒழுங்கை. தெற்கு—நாகநாதன் ஆறுமுகம் யோசேப்பின் ஆதனம். பதிவு D 293|43.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கோட்கொம்மிஷனர்
Auctioneer and Valuer.

"இராசகிரி,"
643, காங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம், 7-10-69.

127/69.

---

**திருமறை ஒளி எங்கும் பொழிக! இருண்ட நிலை ஒழிக!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சமாதானத்துக்காக செபமாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றனர்; திருச்சபையிற்தன்னும் சகோதரர்களுக்கிடையில் மன வேற்றுமை எழுந்து, ஒருவரையொருவர் நிந்தித்துக் குற்றஞ் சாட்டுகின்றனர்; எனவே, முன்னெப்போதையும்விட சமாதானத்துக்காக உழைக்கவும் செபிக்கவும் வேண்டிய அவசியம் நேரிட்டுள்ளது;

பரி. திருச்சபையின் மக்கள் யாவரும் செபிப்பார்களாக.

சிறுவரும் இளைஞரும் உலகை ஆட்டிவைக்கும் மாற்றங்களின் மத்தியில் இவர்களுடைய எதிர்காலம் ஊசலாடுகின்றது.

முதியோரும் பிணியாளரும்: இவர்கள் தமது உபயோகமற்ற நிலையில் சிலசமயம் மனத்தைரியத்தை இழந்துவிடக் கூடும். எனவே, இவர்கள் செபத்தின் வல்லமையைத் திரும்பவும் கண்டுணர்ந்து, சமாதானத்தின் உற்பத்தி ஸ்தானத்தை நோக்கி அமைதியுடன் மக்களை ஈர்க்கும் அன்புநிறைந்த ஆத்துமங்களாக விளங்கவேண்டும்.

வளர்ந்தோர்: நாள் முழுவதும் கடுமையாக உழைக்கும் இவர்கள் செபவாழ்விலிருந்து எழும்போது, தமது முயற்சிகள் கூடிய பலனளிப்பதைக் காண்பர். மரியாளை அறிவதன்மூலம் இவர்கள் யேசுநாதரை அதிகமாக அறிந்து நேசிப்பார்கள். விசுவாசிகளான எமது முன்னோர்களில் அநேகர் இந்த உயிர் கொடுக்கும் அனுபவத்தை உணர்ந்திருந்தனர்.

அர்ப்பணஞ் செய்யப்பட்ட ஆத்துமாக்கள்: மரியாளைப் போலவே இவர்களது வாழ்வும் கிறிஸ்துவின் வாழ்வுடன் நெருங்கி இணைந்து அன்பு, சமாதானமெனும் அவரது போதனையைப் பரப்புவதாக இருக்கவேண்டும்.

மேற்றிராணிமாரும் அவரோடுகூடி வேலைசெய்யும் குருமாரும்: தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்கள் அனைவருக்காகவும், முழு உலகுக்காகவுமே திருச்சபையின் பேரால் செபிக்க வேண்டிய விசேஷவேலையை உடையவரா யிருக்கின்றனர்; தம் செபத்தின்ஆழத்தில் அவர்கள் நிச்சயமாக மரியாயின் பிரார்த்தனையுடன் தம்மை ஒன்றிக்கச் செய்வார்கள்;

உலக சமாதானத்துக்காகத் தொண்டுகளைச் செய்துவரும் அனைவருக்காகவும்— சிறிய கிராமத்திலிருந்து பெரிய சர்வதேச ஸ்தாபனம்வரை— நாம் மன்றாடிவருவோம்;

சகல இடங்களிலும், தனிமனிதருக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் சமாதானத்தையும் இசைவையும் ஏற்படுத்தி பகையைத் தீர்த்துவைக்கும் வேலைக்கு அநேக அழைத்தல்கள் இருக்கவேண்டுமென்று நாம் மன்றாடி வருவோம். என்றும் போர்களுக்கும் பிளவுகளுக்கும் காரணமாயிருக்கும் பிரிவினைகளும், இனவாதங்களும், பகையும், துன்மார்க்கமும் எமது உள்ளம்தொடக்கம் சகலமக்களின் உள்ளங்களிலுமிருந்து களைந்தெறியப்பட வேண்டுமெனப் பிரார்த்திப்போம்;

எமது மீட்பைப்பற்றிய பரமரகசியங்களை அடிக்கடி தியானிப்பது உங்களை மரியாளைப் பின்பற்றி, கிறிஸ்துவின் உருவில் சமாதான கர்த்தாக்களாக ஆக்குவதாக; புனித 5-ம்பத்திநாதர் காலத்திலிருந்து வழங்கிவந்த உருவிலேயோ, இன்றைய தேவைகளுக் கேற்றவிதமாக, உரிய திருச்சபை அதிகாரிகளுடைய சம்மதத்துடன் மாற்றியமைக்கப்பட்ட உருவிலேயோ எமது அன்பிற்குரிய முன்னோடியாகிய 23-ம் அருளப்பர் விரும்பியபடியே!

**செபமாலையானது திருச்சபையினதும், பல்வேறு நாடுகளினதும், அனைத்துலகினதும் சாதாரண அசாதாரண தேவைகளுக்குகந்த ஒருபெரும் பிரசித்தமான பொதுவான செபமாயிருக்கிறது. ஏனெனில் இச்செபமாலை ஒருகுறுகிய சுவிசேஷத்தைப் போன்றது. திருச்சபையின் பக்திமுயற்சிகளில் ஒன்ருக விளங்குவது.**

இந்தக் கருத்துக்காகவே நிகழும் ஐப்பசிமாதத்தில் பரிசுத்தசெபமாலையை நிறைந்த பயபக்தி ஆர்வத்துடன் செபிக்கும்படி உங்கள் எல்லோரையும் அழைத்து எமது அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை அளிக்கிரேம்.

பரி. தந்தை 6-வது சின்னப்பர்.

* * *

செபமாலைசொல்லும் எமது உத்தம பழக்கத்தை இந்த ஐப்பசிமாதத்திலே உலக சமாதானத்துக்காக அதிகரிக்கும்படி பரிசுத்த தந்தை தமக்கு இயல்பான மனமார்ந்த ஆர்வத்துடனும், பிதாவுக்குரிய அன்புடனும் எம்மைத் தூண்டிவிட்டிருக்கிருர். இந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்து நம் மேற்றிராசனத்திலுள்ள எல்லாப்பங்குக் கோவில்களிலும் நிகழும் ஐப்பசி மாதத்தில் கிழமைக்கு மூன்று அல்லது நான்கு தடவையாகுதல் கூட்டுச் செபமாலையும் அதன்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் பரி. தந்தையின் கருத்துக்காக நடைபெற விசேஷ முயற்சிகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்றியும் எங்கள் இல்லங்களில் நாளாந்தம் குடும்ப செபமாலை சொல்லும் நன்மைபயக்கும் பழக்கத்துக்குப் புத்துயிர் ஊட்ட இது ஒரு நல்ல தருணமுமாகும்; எங்கள் மரியன்னை எங்களுக்குச் சமாதானமும் அக்களிப்பும் பெற்றுத் தருவதுடன் தேவனின் பிள்ளைகளுக்குரிய சீவியத்தை நாம் சீவிக்க உதவியருளுவார்;

+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை,
யாழ்; மேற்றிராணியார்;

12-10-69;




**அன்புள்ள தம்பி - தங்கையரே, வணக்கம்!**

ஐப்பசித்திங்கள் 19-ந்திகதி வேதப்பரப்புதல் ஞாயிறு வாரமாகும்; அன்று அகில உலகிலே அஞ்ஞான அந்தகாரத்தில் அமிழ்ந்தியிருக்கும் மக்களிடையே வேதபோதகத் தொண்டாற்றுவோரை விசேடவிதமாக நினைவுகூரும் தினம். மகத்தான சேவையில் அவர்கள் அனுகூலமடைய அருள்பாலிக்க அமலனைப் பிரார்த்திக்கும் தினம். பரித்தியாகக் கிரிகைகளைப் புரிந்து அவர்களின் விசேட கருத்துக்களுக்காக ஒப்புக்கொடுக்கும் தினம். அவர்கள் சேவைக்கு ஆக்கம் அளிக்க நம்மாலியன்ற பணவுதவி புரியும் தினம்.

மானிலத்து மக்களின் இரட்சணியத்திற்காகத் தமது விலைமதிக்கரிய செங்குருதியைச் சிந்திஞர் கிறிஸ்துநாதர். அத்திரு இரத்தத்தின் பயனையடையாது அஞ்ஞான இருளிலே அமிழ்ந்தியிருக்கின்றனர் கோடிக்கணக்கான மக்கள். அவர்கள் அனைவரும் கிறிஸ்துநாதரின் குரலோசைக்குச் செவிசாய்க்க வேண்டும். இரட்சணியத்தின் பேறுபலன்களை அனுபவிக்கவேண்டும். கிறிஸ்துநாதரின் விருதுக் கொடியின்கீழ் ஒன்றுசேர வேண்டும். அன்று கிறிஸ்துநாதர் ஆசித்த "ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனும்" இன்று உலகில் உருப்பெற வேண்டும்.

இத்தினத்தில் வேதபோதகர்களின் மகத்தான சேவைகளை நினைவுகூரும்நாம் அவர்களின் கருத்துக்களுக்காக விசேட விதமாகச் செபிக்க வேண்டும். கிறிஸ்துநாதரின் இராஜரீகத்தை உலகம் ஏற்றுக்கொள்ளும் பொருட்டுப் பற்பல பரித்தியாகக் கிரிகைகளைப் புரியவேண்டும். வேதப்பரப்புதல் சபையில் சேர்ந்து அதன் கடமைகளைச் சரிவர நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

அண்ணு

## சிரிக்கும் சிலை

கொட்டும் மழை—சொட்டும் பனி—படபடக்கும் குளிர் காற்று—வீசும் மண்மாரி இத்தனை இயற்கையின் எதுக்களுக்கு ஈடு கொடுத்துக்கொண்டு உணர்ச்சியற்ற நிலையில் ஓர் உருவம் இருக்குமாயின் உண்மையாக அது ஒரு கற்சிலையாகத்தான் இருக்கவேண்டும். அந்த உணர்வற்ற ஒப்பற்ற ஓவியத்தைத் தீட்டிய ஓவியனும் அதை ஒரு சிரிக்கும் சிலையாகவே சமைத்தான். அந்த நீண்ட வீதியின் அருகில் அமைந்திருந்த அந்த அழகிய சிரிக்கும் சிலை ஒரு கட்டிளம் காளையை ஒத்திருந்தது. அது ஓர் உயிருள்ள—உணர்வுள்ள நடமாடும் உருவமாய் இருந்திருக்குமாயின் மேற் கூறிய இயற்கை எதுக்களுக்கு எதிர்நிற்கமுடியாது. ஆனல் இந்த வாழ்வு என்ற நீண்ட வீதியிலே நடந்துகொண்டிருந்தான் முத்து. கருணை உள்ளம்கொண்ட அவன் எப்பொழுதும் பிறர் நலம் நாடி வாழ்வான். யாரேனும் துன்பத்தால் அழுதால் தானும் அழுவான். உதவி என்று யாரேனும் குரல்கொடுத்தால் உடனே குதித்து ஓடுவான். ஆனல் 'சுண்டைக்குப் போய் மண்டை உடைந்தது' என்பதைப்போல் உதவி செய்யப்போய் அவப்பேருக்கு ஆளானன். அன்பு செய்யப் போய் வசை மொழியும் பெற்ருன். ஆறுதல் கூறப்போய் அவலநிலை அடைந்தான். பல்லோரும் பாலகன்போல் பழகியதால் பழிப்பிற்கு உள்ளானன். அன்பை யார் அள்ளிச் சொரிந்தார்களோ அவர்களோடே தன் உயிரையும் பணயம் வைத்துவிடுவான். இப்படிப்பட்ட உத்தமனுக்கு உலகோர் கொடுத்த இயம்ப முடியாத இன்னல்களால் அவன் மனம் புண்பட்டது. குறைகூறும் வையகத்தில் வாழ்ந்து ஏன்? இறந்துவிடுவோம் என்று அவன் சிந்தையில் அடிக்கடி தோன்றும். அது கோழைகள் செயல் ஆதலால் அதை நீ செய்யலாகாது. என்று அவன் மனச்சான்று குரல் கொடுக்கும். இல்லறவாழ்வில் வெறுப்புக்கொண்ட அவன் இறைப் பணி செய்யவே விரும்பினன். இறைவனேடு இரண்டறக் கலந்து வாழ இதமான ஒரு வழி துறவறம் என அவன் கருதினன். தன்னைத் தயார் செய்தான். ஏழைகள் வடிவிலே—எளிய வாழ்க்கை முறையிலே இறைவனைக் காணலாம் என்ற எண்ணத்தோடு குருமடத்தில் புகுந்தான். படித்தான் பக்தியுடன். உழைத்தான் ஒரே நோக்கோடு.

ஒறுத்தல் என்ற மாமரத்திலே உதவா உணர்ச்சி என்ற சின வேங்கையை—தூய எண்ணமென்ற இரும்புச் சங்கிலி கொண்டு இறுகக்கட்டி—செபமென்ற சவுக்கெடுத்துச் சாடிவிட்டு உள்ளமென்ற கோயிலிலே இறைவனுக்கு இனிய இடமளித்து இன்புற்று வாழ்ந்தான். இறுதியில் இறைவனின் பிரதிநிதி என்ற பட்டமும் பெற்றுர். இனி அவர் ஒரு குருவானவர். மக்களோடு நடமாடினர். இயம்பமுடியாத இறைப்பணி புரிந்தார். தாய் மறையாம் கத்தோலிக்க திரு மறையை வளர்த்தார். ஏழையோடு ஏழையாக வாழ்ந்தார். ஆனல் அங்கேயும் ஆயிரம் பேர்கள் அவரைத் தூற்றினர்கள். குருவாகமுலைபு பெற்ற வசையிலும்பார்க்க இப்பொழுது பன்மடங்கு பெற்றுர். முன்பெலாம் இந்த வசையாளர்களை — வசை வார்த்தைகளையும் காண—

தொடர்ச்சி 6-ம் பக்கம்)

## நண்டின் முன்மாதிரி



அற்ப ஜெந்துவான நண்டு நம் வாழ்க்கையில் ஒரு பாடத்தைக் கற்பிக்கிறது. ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமாஞல் முதலில் நாம் அதைச் செய்து காண்பிக்க வேண்டும். அப்போதுதான் ஏனையோரும் அதைச் செய்வர்.

ஒரு குளத்தில் நண்டு ஒன்று தன்னிரு குஞ்சுகளுடன் வாழ்ந்துவந்தது. முன்னுடி நேராக நடக்கும்படி எத்தனையோ முறையாகச் சொல்லியும் குஞ்சுகள் தாம் பழகிய பழக்கத்திலிருந்து தமமை மாற்றிக்கொள்ள முடியவில்லை. தாய் நண்டுக்குக் கோபம்வந்தது. என்ன ஒரு முறையா இரு முறையா உங்களுக்குக் கூறுவது? என் சொற்படி நடக்காவிட்டால் இன்றுமுதல் என்னிடம் வரவேகூடாது என்று கடிந்துகொண்டது.

அம்மா ஏன் கோபிக்கிறீர்கள்? நாம் எவ்வளவோ முயன்றுபார்த்தோம்முடியவில்லை. நாம் ஒன்றுமட்டும் உங்களிடம் கேட்கிருேம். சரியான முறையில் எங்களுக்கு நடந்து காட்டுங்கள் அம்மா, நாமும் அப்படி நடப்போம் என்றன. சரி பாருங்கள் நடந்து காட்டுகிறேன் என்று கூறி நடக்க ஆரம்பித்தது தாய் நண்டு. எவ்வளவோ முயன்றும் நேரே செல்ல முடியவில்லை. ஒரு பக்கமாகவே சென்றது. குஞ்சுகள் இதுகண்டு கொல் என்று சிரித்தன. அம்மா உங்களுக்கே சரியான முறையில் நடக்கத் தெரியவில்லை. அப்போது நாம் எப்படிச் சரியான முறையில் நடப்பது? என்று கேட்டன. தாய் நண்டு சொல்வதறியாது திகைத்து நின்றது.

எம் வாழ்விலும் இப்படித்தான். நாம் சரியான வழியில் ஒன்றைச் செய்து காட்டினுல்தான் ஏனையோரும் அதைப் பின்பற்றுவார்கள்.

அ. ம. நேசம்.

**விசுவாசக்கொடி எங்கும் பட்டொளிவீசிப் பறக்கட்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைபரப்பு ஞாயிறை முன்னிட்டு

# ஆறாவது சின்னப்பதந்தையின் செய்தி



ஐப்பசி **19** மறை பரப்பு ஞாயிறு

"இன்று நாம் விடுக்கும் செய்தி இதுவே;. எம்மிலும் எம்மைச் சூழவரவும் மறை பரப்புதற் கொள்கையைத் தெளிவாகவும் ஆணித்தர மாகவும் பரப்புதற்கு நாம் தெண்டிப்போமாக."

## இறைவனின் பரிசுத்த திருச்சபையின் குமாரர்களே! குமாரத்திகளே! எமக்கு மிக அருமையான சோதரர்களே!

ஆன்மீகத்துவமாக இவ்வேளையில் உங்களிடையே நாம் இருப்ப தாக எண்ணிக்கொள்கின்றோம்: எமது ஆண்டவரின் அன்பை முன் னிட்டு எமக்குச் செவிசாய்ப்பீர்களாக!...

இவ் 1969-ம் ஆண்டின் ஐப்பசித்திங்கள் 19-ம் நாளில் வருகின்ற அகில உலக விசுவாசப்பரப்புதல் ஞாயிறை முன்னிட்டு, இவ்வருட மும் எமது இதயத்தினின்று எழுகின்ற வார்த்தைகளை உங்கட்கு எடுத்துரைக்க விரும்புகின்றோம். அகிலஉலக ஜனங்கள் எல்லோருக் கும் எம்மைப் பொறுப்பாளிகளாக்கி, எம்மிடம் ஒப்படைக்கப்பட் டுள்ள எமது அப்போஸ்தலத்துவ போதகத்திலிருந்து எப்போதுமே எடுத்துக் கூறப்படுவதாயும், புதிதாக எதையும் கூற இல்லாமையா யும் இருப்பினும் நாம் இச்செய்தியை விடுக்காது மௌனஞ் சாதிக்க முடியாது. புனித சின்னப்பர் கூறுவதேபோல் "எல்லோருக்குமே நாம் கடமைப்பட்டவர்களா யிருக்கின்றோம் (உரோமை; 1 ; 14;) நான் "சுவிசேஷத்தைப் போதிக்காதிருப்பேனேயாகில் எனக்கு ஐயோ கேடாகும்" (1 கொரிந்தியர் 1 ; 14.) இச்செய்திக்குச் செவிசாய்ப் பதற்கு முன்னேயே, பிதாவிடமிருந்து அனுப்பப்பட்ட முதல் வேத போதகரானவரும், மரித்தோரினின்று உயிர்த்தெழுந்தவரும், தமது அப்போஸ்தலர்களுக்கும், அவர்களைப் பின்தொடர்ந்துவரும் நம்மவ ருக்கும் "பிதா என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்பு கின்றேன்" (அருளப். 20 ; 21.) என்று வசனித்தவருமாகிய கிறிஸ்து வின் கட்டளையை நாம் எமது இதயங்களில் கேட்டுள்ளோம்.

இன்றைய எமது செய்தி இதுவேயாகும்! எம்மிலும், எம்மைச் [illegible]

இவ்விதமாக நம்மேல் சுமத்தப்பட்டுள்ள கடமையானது நம்மை எவ்விதத்தில் கட்டுப்படுத்துகின்றது என நோக்குவோம். கிறிஸ்து வின் செய்தியை எங்கும் பரப்பத் திருச்சபை எடுக்கும் பொது முயற்சிகளில் நாம் எல்லோரும் இணைந்து செயலாற்ற வேண்டும்; நாம் திரும்பவும் கூறுவது யாதெனில் சுவிசேஷத்தைப் பரப்புதல் குருமரபினருக்கும், இத்தொண்டுக்கென அர்ப்பணிக்கப்பட்ட சில ஸ்தாபனங்களுக்கும் மட்டுமே உரிய கடமையென எண்ணுமலும், ஆன்மீக சுயநலம், அக்கறையின்மை, வேற்றுமை பாராட்டல் முத லியவற்றிற்கு இடமளிக்காமலும் எல்லோருமே இத்தொண்டில் ஈடு படவேண்டும்; விசுவாச அழைத்தலை ஏற்று, அதற்கியைய வாழ விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தூயஆவியானவரின் ஏவுதலை ஏற்றுக்கொள்ளும்படி தன் ஆன்மாவை அகலத் திறக்கவேண்டும்; அருட்பிரசாத உயிரில் பிறந்த ஒவ்வொரு இறைவனின் புத்திரனும் புத்திரியும் தூயஆவியின் தீர்க்கதரிசன மூச்சினால் தாக்கப்படவேண் டும். (அப். நடபடி 2 : 17); முழுக் கத்தோலிக்க சமூகமுமே விசுவா சத்தைப் பரப்பவேண்டிய அத்தியாவசியத்தை உணரவேண்டும். அப்போஸ்தொலிக்க ஆர்வத்தினாலும், வேதபோதக ஆசையினாலும் திருச்சபையின் ஒவ்வொரு அங்கத்தவனும் பற்றிஎரிய வேண்டும்; அப்போஸ்தலத்துவம், வேதபோதகத்துவம் ஆகிய இரு சொற்களி னிடையேயும் உள்ள ஆவசியகத் தொடர்பும் அவற்றின் சொல்லிலக் கணமும் எல்லாவித அப்போஸ்தலிக்க முயற்சிகளுக்கும் வேதபோத கத்துவம் என்ற பெயரைப் பிரயோகிப்பதற்குப் பலரைத் தூண்டு கின்றது. ஆயின் நாமோ வேதபோதகத்துவம் என்றசொல்லை அதன் விசேடித்ததும், தொழிற்றுறை சார்ந்ததுமான கருத்திலேயே பிரயோ கிக்க எண்ணுகின்றோம். அதாவது இவ்வேதபோதகத் தொண்டுக் கெனவே தம்மை அர்ப்பணித்தவர்களும், தெரிந்துகொள்ளப்பட்ட வர்களும், பயிற்றப்பட்டு உத்தியோகபூர்வமாக அனுப்பப்பட்டவர் களுமாக இருப்பவர்களே வேதபோதகத் தொண்டர்களென அழைக் கப்பட்டு அப்போஸ்தலர்களது அடிச்சுவடுகளில் சென்று உண்மை யைப் பிரசங்கித்துப் புதிய திருச்சபைகளைக் கிறிஸ்தவர்களல்லாதோர் மத்தியிலே உருவாக்கும் நோக்கத்துடன் உழைக்கின்றமையையே எடுத்துக் காட்டுவதாகும்; அதாவது வேதபோதகத்தைப் பற்றி நாம் இப்போது ஒரு கட்டுப்பாடான உணர்வுடன் எடுத்தாள்கின் றோம், திருச்சபையின் வேதபோதகமுயற்சிகள் என "அட் ஜென்ரஸ்" என்ற வெளியீட்டில் பொதுச்சங்கத்தினால் விளக்கப்பட்டபடி விசு வாசிகளின் கவனமானது வேதபோதகத்தின் தன்மை, அதன் நோக் கம், அதன் நிறுவனங்கள்மட்டில் மிக அக்கறையாகத் திருப்பப்படல்

## வேதபோதகப் பணியில் ஈடுபடுவதற்கு ஆயிரக்கணக்கான கொடையாளர்களது கரங்களின் உதவி உடனே தேவை!

அதிவண. மொன். முத்துக்குமாரு (தேசிய வழிகாட்டுநர்)

ஈதலினால் கிடைக்கும் உண்மை இன்பத்தை ஈந்துதவியவர்களே அனுபவித்திருக்க முடியும். மற்றவர்கட்குக் கொடுத்துதவுவதில் ஓர் இன்பம்!... மற்றவர் நலனுக்காக எம்மை மறுத்துத் தியாகம் புரிவதில் ஓர் இன்பம்!... நம் அயலாரை அவர்கள் அழுந்தியுள்ள சகதியிலிருந்து கைகொடுத்துத் தூக்கிவிடுதலில் ஓர் இன்பம்! பிறனொருவனுக்கு நம்பிக் கையும் மகிழ்வும் அளிக்கும்படியாக எமது இன்பசுகங்களைத் துறந்துவிடுதலில் ஓர் இன்பம்! ஆஹா!... இதுவல்லவோ வாழ்வு! இத்தகைய வாழ்வின் உன்னத பாதையைத்தான் வேத போதக ஞாயிறு எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இன்றும், நாளையும் எமது விழிப் பான வாழ்க்கையின் ஒவ்வொரு நாளிலும் இத்தகைய இன்பத்தை அனுபவிக்க நாம் செய்யவேண்டியதெல்லாம் சிறு தியாகங்களே.


மற்றோர்முறை வேதபோதகப் பரப்புதல்ஞாயிறு நம்மிடையேவந்துள்ளது. அத்து டன் எமது கிறிஸ்துவரீதியான மனச்சாட்சியிலே ஆயிரக்கணக்கான நினைவலைகளும் தோன்றுகின்றன.

கடந்த ஒருவருட காலத்தினிடையே வேதபோதக உலகினிலே எத்தகைய சம்ப வங்கள் இடம்பெற்றுள்ளன என்பதை இவ்வேதபோதகப்பரப்புதல் ஞாயிறில்நாம் உய்த் துணர வேண்டுமல்லவா? ஆபிரிக்காக் கண்டத்திலே விசேஷித்ததோர் விதத்திலே எமது திருச்சபை தன் பணியில் முன்னேறிய அதிசயத்துக்குரிய சூழ்நிலைகளைப்பற்றியும், அண் மையில் அப்பாரிய தேசத்திற்குப் பரிசுத்த பாப்பரசர் ஆறும் சின்னப்ப அடிகளார் விஜயம் செய்தது பற்றியும் நாம் நினைவுகூர வேண்டுமல்லவா?... உண்மையிலே மிகமிகப்பாரிய திட்டங்கள் நிறைவுறுதல் அடைந்துள்ளன. நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்காகவும், நம்பிக்கையுடன் செயலாற்ற முடிந்ததற்காகவும், போதிய சாதகமான சூழ்நிலைகளை வருத்து அளித்ததற்காகவும் நாம் அதிகமதிகம் இறைவனுக்கு நன்றிகூற வேண்டியவர் களாகின்றோம். ஆயின் பலமான எதிப்புக்களும் ஆங்காங்கே எழும்பி எதிர்க்கத்தான் செய்கின்றன. எனவே எம்மாலானவரை அவற்றுடன் போராடுவதற்காக எமக்கு இறைவ னிடமிருந்து வரும் அழைப்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. குருத்துவ, துறவற

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வின் கட்டளையை நாம் எமது இதயங்களில் கேட்டுள்ளோம்.

இன்றைய எமது செய்தி இதுவேயாகும்; எம்மிலும், எம்மைச் சூழவரவும், விசுவாசப்பரப்புதற் கொள்கையைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பரப்புதற்கு நாம் தெண்டிப்போமாக. எமது பொதுச்சங்கக் கூட்டங்களின் பின்னர், இறைவனின் ஜனங்களுக்காக இக்கொள்கையைக் கையாளும் புதிதான பிரதானத்துவத்தையிட்டு நாம் அதிக கவனஞ் செலுத்தவேண்டியது; கிறிஸ்தவன் என்ற சொல்லின் வரைவிலக்கணத்தையே இது சார்ந்துள்ளதெனலாம்; பொதுச்சங்கக் கூற்றின்படி ''விசுவாசத்தைப் பரப்பும் கடமைப் பாடானது கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷன்மேலும், அவனவன் இயல்புக் கேற்றவாறு சுமத்தப்பட்டுள்ளது.'' (சங். ஏடு. தி. 17) அன்றியும், திருச்சபையின் எல்லாப் புத்திரர்களும் உலகின்மட்டில் தாம் கொண்டுள்ள பொறுப்புக்களையிட்டு உயிருள்ள அறிவாற்றல் உடையவர்களாய் இருத்தல்வேண்டும். இவர்கள் ஓர் உண்மையான கத்தோலிக்க ஆன்மீகத்துவத்தைத் தம்மில் உருவாக்கவும் வேண்டும். சுவிசேஷக போதக தொழிலில் தமது முழுச்சத்துவத்தையும் செலவழிக்கவேண்டும். (சங். ஏடு. வே. 36) இது எல்லோருக்குமே உரிய அழைத்தலாகும். முழுத் திருச்சபைக்குமேயுரிய கடமையுமாகும்; கத்தோலிக்கன் என்றாலே இயற்கையாகவே வேதபோதகப் பரப்புதலாளன் எனவே கொள்ளப்படவேண்டியது. (சங்.ஏடு.வே.ப,2,6,35) இதை நாம் எப்போதுமே அறிந்துள்ளோம். ''கிறிஸ்துவைச் சிநேகிக்க விரும்பினால் உங்கள் சிநேகமானது முழு உலகையும் தழுவியதாக இருக்கவேண்டும்'' என ஏற்கனவே புனித அகுஸ்தீனர் படிப்பித்துள்ளார். ஆயின், பொதுச்சங்கமானது திருச்சபையின் இச்சட்ட பூர்வமான இயற்கை விதிகளை மிகவுந் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. எனவே விசுவாசிகளின் கூட்டமாகவோ, அன்றேல் தனிப்பட்ட முறையில் கிறிஸ்தவனாகவோ, நாமெல்லோரும் கிறிஸ்துவின் சிநேகத்தின் தூண்டுதலுக் குட்பட்டவர்களாயிருக்கின்றோம்; கிறிஸ்தவர்களில் எவ்வகையினரேனும் இந்த வேதபோதக அழைத்தலினின்று தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. தியான சபைகளில் ஈடுபட்டுள்ளோரும் இவ்வழைத்தலுக்குட்பட்டவர்களே. ''பொது மக்கள் மூலமாகவும் தமது இராச்சியத்தைப் பரப்ப இறைவன் விரும்புகின்றார்'' (சங். ஏடு. 36) எனக் கூறப்படுவதனால் பொதுவான விசுவாசிகள் கூட்டத்தினரும் இவ்வழைத்தலுக் குட்பட்டவர்களே. எனவே, இத்தகைய அகில உலக அப்போஸ்தலத்துவ தொண்டே நமது திருச்சபையின் இன்றைய புதிய மனப்பான்மையாக விளங்குகின்றது.



**இல்லாதவர்களுக்கு என்னிடமுள்ளதிலிருந்து கொடுத்தல் கிறிஸ்துவிற்கும் உலகிற்கும் என் உடைமைகளிற் சிறந்ததை அளிப்பதாகும்.**

என்ற வெளியீட்டில் பொதுச்சங்கத்தினுல் விளக்கப்பட்டபடி விசுவாசிகளின் கவனமானது வேதபோதகத்தின் தன்மை, அதன் நோக்கம், அதன் நிறுவனங்கள்மட்டில் மிக அக்கறையாகத் திருப்பப்படல் வேண்டும்; விசேஷவிதமாக நாம் இங்கு குறிப்பிடவேண்டியது பரிசுத்த ஸ்தானத்தின் முறைமையின்படி முக்கிய மேய்ப்புப் பணியின் பொறுப்பில் ஈடுபட்டுள்ள பாப்பரசரது வேதபோதகத் தொண்டுகளின் ஸ்தாபனம்பற்றியே. இத்தொண்டுகளிலேயே முழு உலகத்திலும் சுவிசேஷம் போதிக்கப்படவேண்டிய பொறுப்புத் தங்கியுள்ளது; எல்லாக் கத்தோலிக்க வேதபோதகநாடுகளின் நலனுக்காகத் திருச்சபை முழுவதும் பரம்பியுள்ள எல்லா நிறுவனங்களினதும் தலைமை ஸ்தானமாகவும் இது விளங்குகின்றது. உலகமுழுவதிலும் எங்கெங்கே என்னென்ன வேதபோதகத் தொண்டுகளின் ஆவசியகம் ஏற்படுகின்றதென்பதன் விபரங்களைப்பற்றிய அறிவும் இதற்குண்டு; அத்துடன் எல்லாவித தேவைகளிலும், சந்தர்ப்பங்களிலும் நீதியான மனப்பான்மையுடனும் பிறர்சிநேகத்துடன் யாவற்றையும் பகிர்ந்தளிக்கக்கூடிய முறையிலும் அதன் ஸ்தாபனமுறை அமைந்துள்ளதென்க.

இவ்விதம் திருச்சபையில் ஓர் உத்தியோகபூர்வமான மத்திய ஸ்தாபனம் அமைந்திருத்தலானது வேதபோதகத் தொண்டுகளைத் தடைப்படுத்தக்கூடியதானவிதத்தில் சில தேசங்களிலே ஏற்படக்கூடிய கஷ்டங்களை நிவர்த்திக்கும் வழியாகவும் அமைந்துள்ளது; அக்கஷ்டங்களாவன :— இரட்சணியத் திட்டத்தோடு தொடர்புடைய அப்போஸ்தொலிக்க கட்டளைகளையும், சமய உண்மைகளையும் பற்றிய விடயங்களிலே விகற்பமான கோட்பாடுகளை உண்டுபண்ணக்கூடிய கடவுட் பற்றற்ற போதனைகளை உருவாக்கும்படி சமய சுதந்திரம் என்ற பெயரில் ஏற்படும் கொள்கையின் பிரசித்த அறிக்கைகளின் இன்னல்களேயென்க. வேதபோதகத்தொண்டு இனிமேலும் அவசியமற்றதெனச் சிலர்கூறலாம். வேதபோதகத் தொண்டினைப் பாதுகாக்கவும், ஊக்கப்படுத்தி முன்னேற்றவும் எனத் திட்டமிட்டு அமைக்கப்பட்ட பாப்பரசரது ஸ்தாபனத் தொண்டுகள் இந்தக் கொள்கைக்கு மாறுபட்டவையே; பொதுச்சங்கக் கூற்றின்படி சமயசுதந்திரத்தில், சமயம் இவ்வுலக ஆதிக்கம் எத்தகையதனுலும் கட்டுப்படுத்தப்படாததும், தவறான சமூக, அரசியல் பிரிவுணர்ச்சிகளினுல் பாதிக்கப்பட்டதுமாய் அமைந்திருத்தலேயாகும்; இது நமது அப்போஸ்தொலிக்க தொண்டுகளில் நம்மைத் தளர்வடையச் செய்வதற்காகவல்ல; ஆயின் வேதபோதகத் தொண்டில், சமய அடிப்படையில் வரும் இரட்சணியத்தின் ஒரே உண்மைச் செய்தியைப் போதிப்பதில் மனச்சாட்சிச் சுதந்திரத்துடன் தொழிலாற்றும்படியான ஆட்சியியல் முறையை அடைந்து கொள்வதேயாகும்;

இதுவே திருச்சபையினது அடிப்படையானதும் பாரம்பரியமானதுமான நிலையாகும். ஆயின் இதனையே பொதுச்சங்கமும் புதுப்பித்து தெளிவாக்கியுள்ளது; இதனுல் நாம் எமது உதவியை வேண்டிய சோதரர்களையும், பிள்ளைகளையும் நினைக்கவும், வேத போதகத் தொண்டு சம்பந்தமாக இன்றையநாட்களில் எழும் புதுவித கொள்கைகளையிட்டு ஆலோசிக்கவும் எம்மைத் தூண்டுகின்றது. இவ்வித கொள்கைகளோ அனந்தம். உதாரணமாக, மனித ஒற்றுமையின் முன்னேற்ற நிலையானது நாகரீகம் விருத்தியாக விருத்தியாக மக்களிடையே தொடர்பை ஏற்படுத்துகின்றது; மேலும் முன்னேற்றமடைந்த நாடுகளின் மக்களும் அரசாங்கமும் மற்றைய நாடுகள் முன்னேறும்படி தம்மாலான உதவிகளை விருப்பத்துடனும், சுயநலமின்றியும் அளிக்கின்றன; 'ஜனத்தொகையின் முன்னேற்றம்' என்பதைப்பற்றிய எமது நிருபத்தில் இதையிட்டுக் கூறியுள்ளோம்.

இவ்விதமாக வேதபோதகப் பரப்புதல் முயற்சியானது விருத்தியடைந்துகொண்டே வருகின்றது; தூரதேசங்களிலும், அறியப்படாத இடங்களிலும் வேதபோதகத் தொண்டைப்பரப்பும் துணிகர முயற்சியானது அயல்நாட்டுக்குரியதும், அருந்திறனெனப் பாராட்டுக்குரியதுமானது; இன்று இக்கருத்துணர்வானது உறுதியானதும் உண்மையானதுமாக விளங்குகின்றது. ஏனெனில், மேற்கொண்டு அனுபவ சாத்தியமாக வேதபோதகத் தொண்டு பலனளிக்க இடமுண்டு. இவ்வனுபவங்கள் தேவைக்கு மேற்பட்ட அளவு தேச ஆராய்ச்சிகளிலிருந்து விடுபட்டு வேதபோதகத் தொண்டர்கள் தம் செயற்றிறன்கொண்டு தமது பயிற்சியில் விசேடித்தவர்களாக வர

( தொடர்ச்சி 7-ம் பக்கம் )

களாகின்றோம். ஆயின் பலமான எதிப்புக்களும் ஆங்காங்கே எழும்பி எதிர்க்கத்தான் செய்கின்றன. எனவே எம்மாலானவரை அவற்றுடன் போராடுவதற்காக எமக்கு இறைவனிடமிருந்து வரும் அழைப்பும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. குருத்துவ, துறவற அந்தஸ்தின் அழைத்தல்கள் வரவரக் குறைந்துகொண்டே போகின்றன, எல்லாவிடங்களிலும் தொண்டாற்றுதற்குப் போதிய அளவில் குருமார் நம்மிடையே இல்லை. நன்னம்பிக்கையின் கண்டமாகிய பரந்த ஆபிரிக்கா தேசத்திலே வறுமைநிலை, வாழ்க்கைத் தேவைகள்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)


## உங்கள் தியாகத்தின் அன்பளிப்புகளை இன்றே உங்கள் மேற்றிராசனப் பங்கின் வழிகாட்டுநர்களுக்கு அனுப்பிவையுங்கள்

| | |
|---|---|
| **கொழும்பு :** | வண. நீக்கொலஸ் மார்க்கஸ் பெர்னுண்டோ, புனித அலோஷியஸ் குருமடம், கொழும்பு-8. |
| **சிலாபம் :** | வண. றெக்ஸ் டயஸ், புனித செபஸ்தியார் ஆலயம், கட்டுநேரியா. |
| **காலி :** | வண. யோசெவ் ராஜபக்ஸ, புனித சவேரியார் குருமடம், கலகெனு, காலி. |
| **யாழ்ப்பாணம் :** | வண. எஸ். ஜே. இம்மானுவேல், புனித மர்த்தினூர் குருமடம், யாழ்ப்பாணம். |
| **கண்டி :** | வண. லூவியன் பெரோரா, புனித சூசையப்பர் குருமடம், பூர்ணவத்தை, கண்டி. |
| **திருகோணமலை :** | வண. ஏ. சௌர், புனித மரியாள் தேவாலயம், திருகோணமலை. |

**அன்றேல் கீழ்க்காணும் தேசிய வழிகாட்டுநரின் முகவரிக்கு நேரடியாக அனுப்பி வையுங்கள்.**

**அதிவண. மணிக் முத்துக்குமாரு அடிகளார்,**
தேசிய வேதபோதகப்பணி அலுவலகம்,
கம். 29, பெரோரா ஒழுங்கை, கொழும்பு-6.





பரிசுத்த தந்தையின் மறைபரப்பு நாடுகளுக்கெனப் பணம் கொடுக்கும் போது உதவியற்றோருக்கு ஆறுதல் அளிக்கத் துணை புரிகிறோம்.

# இவர்களிடமிருந்து இன்பம் பலரை நாடிச் சென்றது!...

(எமது தேசிய அலுவலகத்தில் பெறப்பட்ட கடிதங்களிலிருந்து சில துணுக்குகள்)

இவ்வாண்டினிலே, எவருமே பெற்றிருக்க முடியாத சில அதிசயமான கடிதங்களை நாம் மிகமிக மகிழ்ச்சியுடனும் நன்றியறிதலுடனும் பெற்றுக்கொண்டோம். இக்கடிதங்களிலெல்லாம் தியாகம், பிறர் நலன் விழைதல், மகிழ்ச்சி, அன்பு என்பனபற்றிய அழகான கருத்துக்கள் அடங்கியுள்ளன. இன்பம் நிறைந்த தேவனின் நாமத்தினாலே மற்றையோர்க்கு அள்ளிக் கொடுக்கும்வரை நிம்மதியாக வாழ முடியாதவாறு, இறைவனையே தம் இதயகமலங்களில் பரிபூரணமாகக் கொண்டுள்ளவர்களது கருத்துக்களே இவை. கடந்த சில மாதங்களில் நமது தேசிய வழிகாட்டுநரின் அலுவலகத்தில் இவ்விதமான கடிதங்கள் நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளன. அவற்றுள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றிலிருந்து சில துணுக்குகளை ஈண்டு தருகின்றோம்:—

### ஒரு வியாபாரியிடமிருந்து.....

பல வருடகாலமாக எனது வியாபார முயற்சியில் நான் வெகு சித்திகரமாக முன்னேறி வந்துள்ளேன். ஆயின் அண்மையில், சொற்பகாலமாக எனது முன்னேற்றம் அவ்வளவு திருப்திகரமாயில்லை. உண்மையைக் கூறப்புகின் எனது சூழ்நிலைகளெல்லாம் கஷ்டந்தருவனவாகவே தோற்றுகின்றன. எதிர்காலம் சிறப்பாக அமையக் கூடுமென யான் எண்ணுதற்கு எவ்வித சாதகமான விடயங்களையும் காணமுடியாத நிலையிலிருக்கின்றேன். வேதபோதகநாடுகளின் அழைப்புக்குச் செவிசாய்க்கவும், என்னாலான உதவிபுரியவும் இத்தகைய கஷ்டசூழ்நிலையே ஓரளவுசிறந்ததென யான் கருதுகின்றேன். எனவே, உலகெங்குமுள்ள பாப்பரசரின் வேதபோதக ஸ்தாபனங்கட்கு உதவிபுரியுமாறு இத்துடன் ஓர் காசோலையை அனுப்பியுள்ளேன். உண்மையான விசுவாசத்துடனும், அன்புடனும் செபவேண்டுதல்களுடனும் இதனை அனுப்புகின்றேன். தயதுசெய்து உங்கள் ஆசியை எனக்கருள்வீர்களாக.........

### விரக்திநிலையில் தவிக்கும் இளைஞனொருவனிடமிருந்து:

அன்புள்ள தந்தையே!... வாழ்க்கையில் வெறுமையான நாட்களையும் இன்பமற்ற சூழ்நிலையையுமே சொந்தமாகக் கொண்டு விரக்திநிலையில் தவிக்கும் இளைஞனொருவனிடமிருந்து இக்கடிதம் உங்கட்கு வருகின்றது. உலகிலே பசிபட்டினியாலும், அவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்படாமையினாலும் கலங்கித் தவிக்கும் லட்சக்கணக்கான மாந்தரின் எண்ணமொன்றே என்னை வாழ்க்கையில் விரக்தியின் எல்லைக்கே போய்விடாதபடி இதுகாறும் காப்பாற்றி வந்துள்ளது. தங்களது சஞ்சிகையான "காருண்யம்" என் வாழ்வின் இருண்ட பாதையில் எனக்கு ஒளியூட்டியுள்ளதால் நான் இன்னமும் வாழ்ந்துகொண்டே செல்கின்றேன். இதற்கு நன்றியறிதல் தெரிவிக்கும் முகமாக, இதோ தற்போது என்னிடமுள்ள அத்தனை பணத்தையும் தங்கட்கு அனுப்பிவைக்கின்றேன். இப்போது நான் எனது விரக்தி மனப்பான்மையினின்று மகிழ்வுடன் இருப்பதனால் எனது உள்ளன்புடன் இதை அனுப்புகின்றேன்.........

### இருள்மயமான வேதனையின் படுக்கையிலிருந்து:

கடந்த ஏழெட்டு மாதங்களாக வேதனையின் படுக்கையிலே கிடந்து அவஸ்தையுறுகின்றேன். நற்சுகம் ஏற்படுவதற்கான அறிகுறிகளோ எதுவும் தென்படவில்லை. ஆயின், தியானத்திலீடுபடுவதற்கு எனக்கு நிறைய நேரம் கிடைத்திருக்கின்றதே. அதனால்தான் எனது எண்ணங்கள் வேதபோதகப் பரப்புதற் சபைகளைச்சுற்றி வட்டமிடுகின்றன. என் காணிக்கையாகச் செலுத்துதற்கு என்னிடம் பணமில்லை. ஆனால், என்னிடம் தங்கட்கு கொடுப்பதற்கு நிறையப் பொன்னுண்டு. அவை மனத்துயரில் தவிக்கும் மணித்தியாலங்கள், வேதனையில் துடிக்கும் வேளைகள், மகிழ்வே இல்லாது இருள்சூழ்நிலையில் செலவழியும் கணப்பொழுதுகள் என்னும் பொன்நாணயங்களே. இவையெல்லாவற்றையும் வேதபோதக நாடுகட்கென இறைவன் பதத்தில் அர்ப்பணித்து வருகின்றேன். தந்தையே!......இவற்றிற்காக இறைவன் எனக்குப் பிரதியுபகாரமாகத் தருவது யாது என நீங்கள் அறிவீர்களா? ஆம்!... தயாபரரான இறைவன் மகிழ்ச்சியையும், மனோதிருப்தியையும், இறைவன் செயல்களை விளங்கும் தன்மையையும், நிறைவான இதயத்தையும் எனக்கு அளிக்கின்றார். யான் இறைவனுக்குக் கொடுத்ததிலும் அதிகமாக அவரிடமிருந்து பெற்றுக்கொண்டேன்!......

* இவ்விதமாக எமது வேதபோதக நாடுகளின் கொடையாளர்களது வரலாறுகள் நீடித்துக் கொண்டேயிருக்கின்றன. எமது சொந்த நாட்டிலே, எம் மத்தியிலே நடைபெறும் உண்மைவீரத்துவம் செறிந்த இவ் வரலாறுகள் வேதனைப்படுக்கையிலும், தியாக எல்லையிலும், இதயபூர்வமான வேண்டுதலுடனும் கடிதங்களில் குறிப்பிடப்படுதலே எமது வேதப்பரப்புதற் சபைகளின் உன்னதமொழியாகத் திகழ்கின்றதென்க.

உலகமடங்கலும் உள்ள பாப்பரசரின் வேதபோதக நாடுகட்கு உதவி செய்வதற்காக இத்தகைய அன்பிணைப்பாளர்களுடனும், தியாகிகளுடனும் நீங்களும் வீரத்துவ மனப்பான்மையுடன் கைகொடுக்கமாட்டீர்களா? ... அப்படியானால் இன்றே எமக்கு எழுதுங்கள்...

## புல்ரன் ஷீன் அடிகளாரின் பொன் யூபிலி

அமெரிக்கதேச றொசெஸ்ரர் மேற்றிராசன ஆயராக இருக்கும் புல்ரன்ஷீன் அடிகளாரின் குருத்துவ பொன் யூபிலி இரு வாரங்களுக்கு முன் நடந்தேறியது. அவ்வைபவத்தின்போது பரிசுத்த தந்தை தமது விசேஷ ஆசிர்வாதத்தை அடிகளாருக்கு ஈந்தருளினார். ஷீன் அடிகளார் கவர்ச்சிமிக்க ஒரு பிரசங்கியும் எழுத்தாளருமாக அகில உலகிலும் அறியப்பட்டவர்.

## சிரிக்கும் ....

(சிறுவர்பக்கத் தொடர்ச்சி)

கேட்கச் சகிக்காத அவர் உள்ளம் குருவானவரான பிறகும் சிறிது தளர்ச்சியடைந்தார். உலகோரின் இழிந்த கொள்கையை நினைத்துக்கொண்டு அருகிலே உள்ள கர்த்தர் கோயிலுக்குப் பூசைக்காகச் சென்றுகொண்டிருந்தார். அந்த நீண்ட வீதியின் அருகிலே சிரித்தபடியே நின்ற அந்தச் சிலையின்மேல் அவர் பார்வையைச் செலுத்தினார். ஒருகணம் தன்னை மறந்தார். சிந்தனையில் மூழ்கினார். மழை கொட்டியும்—பனி சொட்டியும்—குளிர்காற்று வீசியும்—மண்மாரி பொழிந்துங்கூட அந்தச் சிலை சிரித்தபடி நிற்பதை எண்ணி வியந்தார். நானும் ஏன் எத் துன்பம் வந்தாலும் அத் துன்பத்தை அணுவிலும் அற்பமாக மதித்து வாழக்கூடாது? என்று எண்ணினார். இறைவனோடு வாழும் உள்ளம் துன்பத்தைக் கண்டு கலங்க வேண்டுமா? எப்படி அந்தச் சிலைக்கு இயற்கையின் முரட்டுச் சுவாத்தியம் துன்பத்தைக் கொடுக்கவில்லையோ அதே போலவே இறைவனோடு ஒன்றித்து வாழ்பவருக்கு இன்னல்கள் வேதனைசெய்வதில்லை. அந்தத் துன்பங்களைப் பார்த்து அந்த உள்ளம் சிரிக்குமே தவிர ஒருபோதும் கலங்காது. இந்த உண்மையைப் புரிந்துகொண்ட குருவானவர் துன்பங்களுக்குச் சவால் விடுவதுபோல் கோவிலை நோக்கி நடந்தார். துன்பங்கள் அவர்மேல் சினங்கொண்ட சிங்கம்போல் பாய்ந்தது. உள்ளம் இறைவனோடு இணைந்துவிட்டால் இன்பமே பெருகும். துன்பத்தைப் பார்த்து அவர் அகம் குளிர்ந்தது—அகம் மலர்ந்தது.

— வி. ஜெகநாதன்
உரும்பிராய்.

## வேதபோதகப்பணியில் ஈடுபடுவதற்கு....

(நாலாம் பக்கத் தொடர்ச்சி)

கஷ்ட சூழ்நிலைகள் என்பனவற்றினாலும், அவிசுவாசநிலையின் அதிகரிப்பினாலும் வேதபோதகப் பணிமுயற்சிகள் பலனளிப்பதும் குறைந்துகொண்டு போவதாகவும் காணப்படுகின்றது.

எவ்வளவுக்கெவ்வளவு நாம் எம்மைச் சூழவர உற்றுநோக்கி ஆராய்கின்றோமோ, அவ்வளவுக்கவ்வளவு எதிர்ப்புகள் எம்மை நோக்கி வந்துகொண்டிருப்பதை அவதானிக்கலாம். அப்படியாயின் திருச்சபையின் வேதபோதகப் பரப்புதற்கொள்கையை முன்னேற்றுவதற்கு எம்மில் ஒவ்வொருவரும் செய்யக்கூடியதுதான் என்ன?...... விசுவாசமேஅற்ற மக்களிடையே அதனைக் கொண்டு செல்வதற்கு இறைவனின் நற்செய்தியை அறியாதவர்களுக்கு அதை எடுத்துக் கூறுவதற்கு, கிறிஸ்துவின் அன்பும் பிறர்சிநேகமும் எங்கே தேவைப்படுகின்றதோ அங்கே அவற்றை நிலைநாட்டுதற்கு உலகெங்கணுமுள்ள இல்லிடமற்றோர், வறியவர்கள், ஒதுக்கப்பட்டவர்களுக்கு மத்தியிலே எஜமானனின் ஆர்வஉணர்ச்சியைப் பரப்புதற்கு நாம் ஒவ்வொருவரும் கையாளக்கூடிய செயல்தான் என்ன?... ஆம், அதை நாம் செய்வோம்!...

வேதபோதகப் பரப்புதல் ஞாயிறனது, நற்செய்தியைப் பரப்பும்பணியில் ஆயிரக்கணக்கான கொடையாளர்களின் கரங்களது உதவியை நாடுகின்றது. எனவே, இறைவனுக்காக இரப்போராய் விளங்குகின்ற நாம் நம் எஜமானது நாமத்தினாலே உங்கள் கரங்களின் உதவிகளை ஆவலுடன் யாசிக்கின்றோம். வேதபோதகப்பணியின் ஆதரவாளர்களது கரங்களின் உதவி நமக்குத் தேவை. இலங்கையிலே இப்பணியின் நற்செய்தியை இன்னமும் அறியாதிருக்கும் ஆயிரக்கணக்கானோரிடையே அதனைக் கொண்டு செல்லக்கூடிய தொண்டர்களின் கரங்களின் உதவி நமக்குத் தேவை. இறைவனையும், அவரில் தன் அயலானையும் அதிகமதிகம் சிநேகிப்பதனால், அதிகமதிகம் அள்ளிக் கொடுத்துதவும் கொடையாளர்களின் கரங்களின் உதவி நமக்குத் தேவை. எமக்குமிகவும் அருமையான எம் தேசத்தின் ஒவ்வொரு மூலைக்கும் எமது சஞ்சிகையான "காருண்ய"த்தின் நற்செய்தியைக் கொண்டு செல்லக்கூடிய அன்பர்களின் கரங்களின் உதவி நமக்குத் தேவை.

அன்பு செயலாற்றப்படும்போதுதான் இன்பம் துளிர்க்கின்றது. மற்றவர்களுக்கு ஈவதிலேதான் என்றும் நிலைக்கக்கூடியதான உண்மை இன்பத்தை நாம் அடையமுடியும். தேவபோதக நாடுகளிலுள்ள எமது சோதர சோதரிகளுக்குச் சேவைசெய்வதன் மூலமாகவே இந்த நிலையான இன்பம் நம்மைச் சாருமென்க. கிறிஸ்துவின் சிநேகத்தினால் உலகை நிரப்புவதும், சமாதானமும் நீதியும் ஆட்சிசெய்யும் ஒற்றுமையின் இடமாக அதனை மாற்றியமைப்பதும், அங்கே மக்கள் ஒருவர் ஒருவரை உள்ளன்புடன் சிநேகித்து, இவ்வன்பை வார்த்தைகளில் மட்டுமல்ல, செயலிலும் காண்பிக்கும் நிலைமையை உருவாக்குவதும் நம்மையும், உங்களையும் சார்ந்த பணியாகும்.

கடந்த வருடத்திலே தியாகஉணர்வுடனும், அபரிமிதமாகவும் அள்ளிக்கொடுத்துதவிய எமது அன்பர்கள் ஒவ்வொருவரையும் இந்த உண்மைஇன்பம் ஆட்கொள்ளுவதாக. இந்த வேதபோதகப் பரப்புதல் ஞாயிறு வாரத்திலே எமது புதிய அன்பர்களாக இணையவேண்டுமென நாம் எதிர்பார்த்து, ஆவலுடன் மன்றாடுகின்ற பல்லாயிரக்கணக்கான கொடையாளர்களது வாழ்க்கையிலும் இவ்வின்பம் பிரவேசிப்பதாக. உண்மை இன்பம் உங்களை ஆட்கொண்டு, உங்களுடனேயே தங்கியிருப்பதனாலே இந்த வேதபோதகப் பரப்புதல் ஞாயிறுவாரத்திலும், அதனைத் தொடர்ந்துவரும் மாதங்களிலும் அகில உலகிலுமுள்ள பாப்பரசரின் வேதபோதக நாடுகட்கு உதவும் கரங்களையுடைய கொடையாளர்களின் தொகை ஒருபெரிய சேனையாக விளங்குமென்க. **எமது ஆண்டவரின் நாமத்தினாலே உங்கள் உதவியை எதிர்பார்க்கின்றோம் என்பதை நினைவுகூருவீர்களாக!**

## ஏன் கத். பத்திரிகைகள் தேவை?

1969 ஆம் ஆண்டு நல்வாசிகளுடைய தினத்தை ஆதரிக்குமாறு கேட்டு இங்கிலாந்து தேசமக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோளில் சுருக்கமாக, ஆனால் ஆணித்தரமாக ஏன் கத்தோலிக்க பத்திரிகைகள் தேவை என்பதை விளக்கியிருக்கிறார் கருதினல் ஹீனன்.

"சாதாரண பத்திரிகைகள் திருச்சபையில் நடக்கும் கருமங்களை முழுதும் வெளிப்படுத்த முடியாதிருக்கின்றன. இதனாலேதான் திருச்சபையின் கருமங்களை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு அதற்கென கத்தோலிக்க பத்திரிகைகள் தேவைப்படுகின்றன" என்கிறார் அடிகளார்.

ஆனதால் ஒவ்வொரு கத்தோலிக்கனும் ஒரு கத்தோலிக்க பத்திரிகையை ஒழுங்காக வாசித்துவர அவர் ஆங்கில நாடடுக் கத். மக்களுக்கு விண்ணப்பித்திருக்கின்றார்.

**அருள் சுரந்த விசுவாசம் ஊட்டுவோம் உலகிற்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணியோசை

7

யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்றார் மூதறிஞர் ஒருவர். நாம் மட்டுமே இன்பத்தை அனுபவித்தல் தகாது. நம்மைச் சூழவுள்ளோரும் அதை அனுபவிக்க ஆவன செய்யவேண்டியதும் மனித நற்பண்புகளில் ஒன்று.

நாம் கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் அடியார்கள், உண்மையொளியைக் கண்டவர்கள், இறைமக்கள். இதுவே எம் மகிமை, எம்பெருமை, எமது மட்டற்ற இன்பமும் இதுவே.

நாம் மட்டுமே இந்த இன்பத்தைச் சுகிப்பது தகாது. எம்மைச் சூழவுள்ளோர் பலர் கிறிஸ்துவை அறியாதவர்கள். உண்மையொளியைக் காணாதவர்கள்.

நமது நாடாகும் ஈழத்தில் இங்ஙனம் கிறீஸ்துவை அறியாதோர் 90சதவிகிதத்தினர் உண்டு. ஆசியாக் கண்டத்திலும் இதே நிலைதான்.

இந்த மந்தைக்குச் சேராத ஆடுகளும் உண்டு. அவைகளும் இங்கு கொண்டுவரப்படுதல் வேண்டுமெனக் கிறிஸ்து விருப்பம் தெரிவித்திருக்கிறார். ஆம், உலகெங்கணும் உள்ள கோடானுகோடி கிறிஸ்தவரல்லாதாரும் கிறிஸ்துவின் உண்மையொளியை அறியவேண்டும்.

இது ஒருபெரிய அலுவல். என்றால் முடியாத காரியம் என நாம் ஒதுக்கிவிடல் தகாது. நமது ஆன்மாவைமட்டுமே கவனித்துக் கொள்ளுதல் சுயநலமாகும். இவ்வுலகில் அறுபதுகோடி கத்தோலிக்கர்கள் உண்டு. ஒவ்வொருவரும் சிறுகமுயற்சித்தால் கிறிஸ்துவின் இராச்சியம் இன்றைய நிலையிலும்பார்க்க இரட்டிப்பானதாகும்.

இதை எவ்விதம் நடாத்துவது?

வருடத்தில் ஒருதடவையாகுதல் இப்பெரும் அலுவலை நினைவுறுத்தும்படியே மறைபரப்பு ஞாயிறைத் திருச்சபை கொண்டாடுகிறது.

அந்நாளில் நாம் செய்ய வேண்டியதென்ன?

முதலில் ஜெபம். இதுயாவரும் கைக்கொள்ளத் தக்கது. தன் ஜெபத்தினால் மட்டுமே பல ஆன்மாக்களைக் கிறிஸ்துவின் இராச்சியத்துக்குள் கொண்டுவந்திருக்கிறாள் புனிதை சிறியபுஷ்பம். கிறிஸ்துவை அறியாதாருக்காக, அவர்கள் மத்தியில் தொண்டாற்றும் நம் குருமார், கன்னியர்கட்காகநாம்ஜெபித்தல்வேண்டும்.

அடுத்து நம் உதாரகுணம், அதாவது, நாம் கொடுக்கும் நன்கொடை. பணமின்றி எதுவுமே நடவாதென்பது எமக்குத் தெரியும். மறைபரப்பும் தொண்டில் பணம்மிகப் பிரதானமானது.

ஆலயங்களை அமைக்க, வறிய பங்குகளில் தொண்டாற்றும் குருமாரைப் பராமரிக்க, குருமார் பயிற்சிப் பள்ளிகளை நடாத்த, வேதபிரச்சார அலுவல்களில் நவீன உத்திகளைப் புகுத்த— பணம்தேவை. நிதிமிகுந்தவர்கள் தாராளமாக வழங்கலாம். அல்லாதவர்கள் செப்புக் காசுகளையாவது தரலாம்.

மறைபரப்புந் தொண்டில் குருமார், கன்னியர்கட்கு எமது உதவிகளும் தேவைப்படலாம். மன மகிழ்ச்சியோடு உதவ முன்வருவோம். கிறிஸ்துவே இதை நேரில் வந்து கேட்பதாக எண்ணிக்கொண்டு முகம்கோணாது செய்து தருவோம்.

மறைபரப்புஞாயிறு எதிரே வருகிறது. **எம்மிலும் எம்மைச் சூழவாவும் விசுவாசப் பரப்புதற் கொள்கையைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் பரப்புதற்கு நாம் தெண்டிப்போமாக** என திருத்தந்தை சின்னப்பர் இத்தினத்திற்கென விடுத்த செய்தி கூறுகிறது.

**உலகெலாம் உண்மை ஒளிபரவ இத்தினத்தில் செயலாற்றுவோம்!**

— மடோனா

## மேற்றிராணிமாரின் விண்ணப்பம்

**பிரேசில் தேசத்தில் சில மாதங்களுக்கு முன் ஒரு புதிய இராணுவ அரசாங்கம் நிறுவப்பட்டதுயாவரும் அறிந்த விஷயமாகும். இந்த இராணுவ அரசாங்கத்தின் ஆட்சிக்காலத் தொடக்கத்தில் அந்நாட்டு மக்கள் பெரிதும் அல்லற்பட்டு வந்தனர். மக்கள் படும் துயரத்தைக் கண்ட அத்தேச மேற்றிராணிமார் இராணுவ அரசாங்கத்தை அணுகி அதன் போக்கை மாற்றிக் கொள்ளப் புத்தி கூறிவந்தனர். அதன் பயனாக நன்மையும் விழந்தைது. மேலும், ஜனநாயக முறைகள் புகுத்தப் படுமெனவும் எதிர்பார்க்கப் படுகின்றது.**

### நன்றி

திரு இருதய ஆண்டவரின் இரக்கத்தினாலும் அர்ச். அந்தோனியார், மடுமாதா, சகாய மாதா ஆகியோர்களது உதவியினாலும் நான் கேட்டுக் கொண்ட காரியம் நிறைவேறியது. இவர்களது நாமம் எங்கும் புகழப் படுவதாக. காலதாமதத்திற்கு வருந்துகிறேன்.

ஓர் அடியான்.

## போட்டிக்கு முந்துங்கள்

**(இதயதாகமுள்ளோர்க்கு மட்டும்)**

"அப்பொழுது ஒவ்வொருவனுக்கும் அவனவன் செயலுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்."

— மத்: 16, 27.

| இடம் | நேரம் |
|---|---|
| நற்கருணை நடுநிலையம் | காலை 6—30 முதல் |
| ஸ்நாபக அருளப்பர் தபோவனம் | மாலை 7—00 வரை |
| யாழ்ப்பாணம் | வருடம் முழுவதும் |

1. **இதற்குச் சமுகம் தந்து, உங்கள் அன்பின் அஞ்சலை ஏற்பவர் :— "சற்பிரசாத அரசரான நசரேத்தூர் இறைமகன் யேசுக்கிறீஸ்து."**
2. **உங்கள் விண்ணப்பத்தை வாசித்து நிற்பவரும், அதற்குப் பரிசு வாங்கி அளிப்பவரும் :— "அமல அன்னை செபமாலை மாதா."**
3. **பார்வையாளர்:— "புனித சூசையப்பர், புனித ஸ்நாபகஅருளப்பர், ஆயிரக்கணக்கான சம்மனசுகள்."**
4. **பரிகாரக் காவலர் :— "பரிசுத்த செபமாலைத் தாசர் சபைக் குருக்கள், துறவியர்."**

**குறிப்பு :—**
**(இவர்கள் ஏற்கனவே தங்களுக்குரிய இடத்தில் இருப்பர்)**

5. **பங்குபெறுவோர் :— "யாழ். மேற்றிராசனத்தில் உள்ள கத்தோலிக்க ஆண், பெண், சிறுவர் முதலியோர் சகலரும்"**
6. **அன்பின் போட்டியை நடத்துவோர் :— "தாய், தந்தையர், குருக்கள், கன்னியர், ஆசிரியர்கள், இல்லறத் தொண்டர்கள், பத்திக்கூடங்கள்."**
7. **உபயோகிக்கும் உபகரணங்கள் :— "நற்செய்தி வாசகம், தியானம், விளக்க உரைகள், சங்கீதம், ஞானப் பாடல்கள், செபமாலைச் செபங்கள், பிரார்த்தனைகள், திருப்பாடுகளின் செபங்கள், தேவ அன்பை மூட்டும் மற்றச் செபங்கள் சொல்ல அனுமதியுண்டு."**

**முதலாம் பரிசு**

**நித்தியகாலம் யேசுவை, மரியன்னையின் அடைக்கலத்தில் இருந்து நேசிப்பது.**

**துணைப் பரிசு**

**இவ்வுலகில் அருள்நிலையில் வளரவேண்டியவரம் கிடைக்கும்.**

**ஆறுதல் பரிசு**

**நல்ல மரணமடைய வரம் அருளப்படும்.**

**குறிப்பு:—விரும்பியநேரத்தில் போட்டியைத் தொடங்கலாம்.**
**தங்களின் வரவை எதிர்பார்த்து இருப்பவர்**
**பங்குத் தந்தை.**

## மறைபரப்பு ஞாயிறைமுன்னிட்டு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்கின்றது. இவை எல்லாம் நிகழக்கூடியனவே: ஆயின் மிகுதியான அழைத்தல்களும் பணஉதவியும் இவற்றிற்குத் தேவைப்படுமென்க.

வேதபோதகம் பரப்பப்படவேண்டிய நாடுகள் சம்பந்தமாக வேதபோதகத் தொண்டர்களின் உணர்வும் மறுமலர்ச்சி பெற்றுள்ளது. அவ்வவ்விடங்களின் விகற்பமான பண்பாடுகள் இவர்களது போதனைகட்கு எவ்விதத்திலும் தடங்கல் அளிப்பதாகத் தோற்றுவதில்லை. ஆயின் இவை இவர்களது தொண்டுகட்கு அதிக மதிப்பையும் கவர்ச்சித்தன்மையையும் அளிப்பதனால், இவற்றை விளங்கி, தமது தொண்டுகட்கு ஏற்றவாறு அமைத்தல்வேண்டும். அல்லது பொதுச் சங்கக் கூற்றுப்படி பரிசுத்தப்படுத்தப்பட்டு, வலியுறுத்தப்பட்டு, மேன்மைப்படுத்தப்பட வேண்டியன. எனவே, ஒரு வேதபோதக தொண்டர் பிறநாடுகளில் விசுவாசத்தைப் பரப்பும் முயற்சியில் ஓர் அன்னியனாகவோ அல்லது தனது பண்பாட்டை அங்கேபுகுத்துபவனாகவோ அமையாது அவ்விடங்களிலுள்ளாருக்கு ஒரு சோதரனாகத் திகழ்ந்து அவ்விடங்களின் வழமைகட்கேற்பத் தன்னை அமைத்துக்கொண்டு சுவிசேஷ உண்மைகளை எடுத்தியம்புபவனாக விளங்குவான். எனவே வேதபோதகத் தொண்டரின் உணர்வானது மனித பண்பாடுகளை ஆதரிப்பனவாகவும், திருச்சபையினதும் விசுவாசத்தினதும் ஒருமைப்பாட்டுக்குச் சாட்சிபகருவதாகவும் காணப்பட்டு, 12-ம் பத்திநாத பாப்பரசர் தமது நிருபமொன்றில் கூறியிருப்பதுபோல சுவிசேஷப் பரப்புதலில் மேல்வரிச்சட்டமாக விளங்குகின்றது.

நேற்றையைப் போலவே இன்றும் வேதபோதகத் தொண்டின் நன்னடக்கைமுறை விலைமதிப்புடையதாகவே விளங்குகின்றது. சுவிசேஷத்தைப் பரப்புவதில் தம்மையே அர்ப்பணித்துள்ள பல்லாயிரக்கணக்கான ஆண், பெண் வேதபோதகத் தொண்டர்கள் இதற்குச்சாட்சி பகருகின்றார்கள். தன்னை முழுவதுமே அர்ப்பணித்தல், ஆபத்துக்களை எதிர்நோக்கத் தயாராயிருத்தல், பொறுமை, உதாரகுணம். முன்னேற்றம் குறைவாகவும் பலன் பூஜ்யமாகவும் இருக்கும் எனக்காணும் போதுகூட நிலையான முயற்சி, தியாக உணர்வு, போதனையில் மட்டுமல்ல சாதனையிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், தனது ஆசைமனப்பான்மைகளைக் கட்டுப்படுத்தத் தயாராயிருத்தல் என்பனவே எப்போதும் வேதபோதகத் தொண்டரிடம் அவசியமாகக் காணப்படவேண்டிய இயல்புகளாம். ஒரு வேதபோதகத் தொண்டன் சீரேன் ஊரானாகிய சீமோனைப் போலக் கிறிஸ்துவின் சிலுவையைக் கடைசிவரை அன்புள்ளத்துடன் பிரசித்தமாகச் சுமந்து செல்லவேண்டியவனாகின்றான்.

எனது அருமையான சோதரர்களே! பிள்ளைகளே! ... இந்த உன்னதமான கருத்துக்களை எடுத்துக் கூறுவதிலும் வேதபோதக நாடுகளைப்பற்றி வழமையான வேண்டுகோளுடனே நமது நிருபத்தை முடிவுரைப்பதில் அதாவது வேதபோதகநாடுகளின் அவசிய தேவைகளைப்பற்றியும், இதற்கென உதாரகுணத்துடன் கொடுத்துதவுவதில் உங்களுக்குள்ள கடமைகளையும் அதனாலேற்படும் மகிமையையும் பற்றியே வலியுறுத்துதலிலும் சற்றுப் பின்வாங்கவே செய்கின்றோம். எனினும் இது நமது கடமையாகும். ஏனெனில், ஆன்மீகத்துவ சம்பந்தமான விஷயங்களிலல்ல: ஆயின் சுவிசேஷப் பரப்பலில் தேவனது திட்டங்கள் நிறைவேறுவதற்காகவும் பிறர்சிநேக அடிப்படைக் கொள்கைகள் பலனளிக்கவும் இதை நாம் எடுத்துக்கூற வேண்டியுள்ளது. வேதபோதகத் தொண்டிற்கு உங்களது உதவிகளும், உங்களது உள்ளன்பும் உங்களது செபங்கள், தான தருமங்களும் அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. உலகமுடிவுவரை தமது பரம இரகசியமான திட்டங்களினால் வழிநடாத்துபவரும், இன்றையதும் எதிர்காலத்ததுமான வரலாறுகளில் தமது பாதச்சுவடுகளைப் பதிப்பிப்பவரும், மக்களின் நிலையைத் தீர்மானிப்பவரும், ஒவ்வொரு மனிதனுக்கும் தம்மை வெளிப்படுத்துபவரும், தமது திருச்சபையைக் கூட்டிச் சேர்த்து அதன் ஆயரும் இரட்சகருமாக அதனை வழிநடாத்து பவருமாகிய கிறிஸ்துநாதரே வேதபோதகத் தொண்டின் ஆதிகாரணராயிருக்கையில் யார் இவ்வுதவிகளை அவருக்கு 'இல்லை' என்று மறுக்கக்கூடியவர்கள்?

"கேட்கச் செவியுள்ளவன் கேட்கக்கடவான்." யேசுவின் வார்த்தைகளையே இங்கு எமது வார்த்தைகளாக எடுத்துக்கூறுகின்றோம். உங்களுதவிகளில் நம்பிக்கையுடனும் அவற்றுக்காக நன்றியறிதலுடனும் எமது அப்போஸ்தொலிக்க ஆசியை எல்லோருக்கும் அளித்து முடிக்கின்றோம்.

**1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 25-ம் நாளில்**
**வத்திக்கானில் விடுக்கப்பட்டது**
**ஆறும் சின்னப்ப பாப்பரசர்**

## விண்ணப்பமே செய்யக்கூடும் பிரிட்டிஷ் அரசாங்கம்

**வடஅயர்லாந்துப் பகுதியில் இடையிடையே கத்தோலிக்கருக்கும் புரொட்டஸ்தாந்தினருக்கும் இடையில் வன்செயல்கள் நடந்து கொண்டு வருவதை நிற்பாட்ட பிரிட்டிஷ் அரசாங்கம் பாராட்டத்தக்க முறையில் முயற்சித்து வருகிறது. அண்மையில் அது வட அயர்லாந்து அரசாங்கத்தைக் கண்டித்து அப்பகுதிக் கத்தோலிக்கர்கள் வட அயர்லாந்து அரசாங்கத்துக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கச் செய்வது அப்பகுதி அரசாங்கத்தின் கடமையென எடுத்துக்காட்டியிருக்கின்றது. ஆனால், பிரிட்டிஷ் அரசாங்கம் இத்தகைய விண்ணப்பங்கள் செய்வதைத் தவிர தமது அதிகாரத்தைக் கொண்டு அங்கு ஒன்றும் செய்துவிடக் கூடியதாக இல்லை.**

**உலகம் உய்ய ஊட்டுவோம் விசுவாசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஐப்பசி — 1969

19 ஞாயிறு பரி. ஆவி. விழா. பின் 21-ம். வேதப் பரப்புதல் ஞாயிறு [ப]
20 திங்கள் புனித கன்ரி அருளப்பர் [வெ]
21 செவ்வாய் ஞாயிறு பூசை [ப]
22 புதன் ,, [ப]
23 வியாழன் புனித அந்தோனி மரியா கிளாறற் [வெ]
24 வெள்ளி புனித றபாயல் சம்மனசு [வெ]
25 சனி மாதாவின் நாள் [வெ]

## காவலன் கருத்து

# விசுவாசிகளின் பாரிய கடமை

ஆற்றுப்படை என்பது தமிழ் இலக்கிய உருவங்களில் ஒன்று. பெரும் வள்ளல் ஒருவனிடம் பரிசு பெற்றுச்செல்லும் பாணனோ புலவனோ தான் வழியிற் சந்தித்த ஒருவனுக்கு அவ் வள்ளலின் பெருமைகளை எடுத்துக்கூறி அவனிடம் செல்ல விடுப்பதே ஆற்றுப்படையாகும். அவனது உள்ளத்தில் அடக்கமுடியாத ஓர் உவகையை ஏற்படுத்தி அதைக் காண்பவரெலல்ாருக்கும் எடுத்துக் கூறும்படி செய்கிறது.

ஆற்றுப்படுத்தும் இப் பாணனின் நிலையில்தான் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்கிறான். இறைவனிடமிருந்து விசுவாச மென்னும் அருங்கொடையைப் பரிசிலாகப்பெற்ற அவன் மற்றவரும் தன்போல்வே அதைப் பெற்றுய்யவேண்டும் என்று கருதுவது இயற்கை. அதாவது தான்பெற்ற கொடையின் மேன்மையையும் அதை அருளியவரின் அன்பையும் உண்மையாக உணர்ந்திருந்தால் அதைத் தன்னுள் அடக்கி வைத்திருப்பது இயலாது.

கிறிஸ்தவன் தன் விசுவாசத்தைப் பிறருக்கும் அளிப்பது முதன்மையாக அன்பின் காரணமாகவே நிகழ்கின்றது. தன் மீது இத்தகைய அருளைச் சொரிந்த இறைவன்மீதும் அவரது சிருஷ்டிகள்மீதும் உள்ள அன்பு இவ்வாறு செய்யத் தூண்டுகிறது. அன்பு இருக்கும் இடத்தில் எத்தகைய தியாகங்களும் உவப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. அன்புக்குரியவரின் பொருட்டாக ஏற்றுக்கொள்ளப்படும் எந்தக் கஷ்டமும் ஒரு பொருட்டாகத் தோன்றுவதில்லை.

விசுவாசத்தைப் பரப்புவது அந்த அன்பரின் கட்டளை. "என் பிதா என்னை அனுப்பியதுபோல் நானும் உங்களை அனுப்புகிறேன் என்று அவர் அப்போஸ்தலருக்கு என்று கூறினாரோ அன்றே விசுவாசத்தைப்பரப்பும் அலுவல் கிறிஸ்தவனின் கடமைகளில் ஒன்றாகிவிட்டது. தத்தம் திறமைக்கும் வசதிக்கும் ஏற்றபடி விசுவாசத்தைப் பரப்பும் கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்டு. இக் கடமையை அவன் திருச்சபையோடு ஒன்றித்தே நிறைவேற்றக்கூடியதாயிருக்கிறது.

வேதபோதக அலுவலுக்கென ஸ்தாபிக்கப்பட்ட விசுவாசப் பரப்புதல் சபை தனிப்பட்ட கத்தோலிக்கரின் முயற்சிகளையெல்லாம் ஒன்று திரட்டி, வேதபோதக அலுவலை ஒழுங்காக, கிரமமாக, பல்வேறு பிரதேசங்களின் தேவைகளை அவதானித்து, கூடிய பலனை அடையத்தக்க விதமாக இயங்கி வருகிறது. ஆகவே வேதபோதகத்தின் பிரதான கருவியாக விளங்கிவருவது இச் சபையே. கத்தோலிக்கர் தமது சோம்பலையும் சுயநல மனப்பான்மையையும் விட்டு அப்போஸ்தலிக்க ஆர்வத்துடன் விசுவாசப்பரப்புதல் சபையிற் சேர்ந்து அதன் அலுவலில் பங்குபற்றவேண்டும்.

சமய சுதந்திரத்தைத் திருச்சபை ஏற்றுக்கொண்டிருக்கும் இந்நாட்களில் வேதத்தைப்பரப்ப முயல்வது பொருத்தமானதா என்ற சந்தேகம் சிலர் மனதில் எழக்கூடும். சமய சுதந்திரம் என்பது, ஒருவன் எச்சமயத்தைப் பின்பற்றுவதற்கும் சுதந்திரமுள்ளவனாய் இருக்கவேண்டும்; அரசாங்கத்தாலோ, பிறராலோ அவனுக்கு எத்தகைய இடையூறும் இருக்கலாகாது என்பதே. இது வேதபோதகத்துக்கு மாறானதன்று. இத்தகைய சூழ்நிலையில் மறையைப் பிரசங்கித்தால் அதை ஏற்றுக்கொள்பவர்கள் பூரண மனச் சுதந்திரத்துடன் அவ்வாறு செய்கின்றனர். பலாத்காரத்துக்கு அஞ்சியோ, உலக சகாயங்களைப் பெறுவதற்காகவோ அன்று. ஆகவே, இச்சூழ்நிலை வேதப்பரப்புதலுக்குச் சிறந்த விளைநிலமாகும்.

"தனிமனிதன் ஒவ்வொருவனும் மனுக்குலம் அனைத்தினதும் ஒரு பாகமாய் அமைகிறான் ......... இவ்வுலக செல்வங்கள் அதிகமுள்ள ஒருவன் பொருளில்லாக் குறையுடைய தன் சகோதரன் மட்டில் கருணை காட்டானாகில் அவனிடத்து இறையன்பு எவ்வாறு நிலைகொள்ளும்?"

— 6-வது சின்னப்ப பாப்பரசர்.

# கண்ணீரும் நாட்டுப் பற்றும்

( அருட்திரு. வே. அன்ரனி ஜோண் — பச்சையப்பன் கல்லூரி, சென்னை )

பிறக்கும்பொழுதும் அழுகிறான், இறக்கும்பொழுதும் அழுகிறான் என சினிமா இசைப்பாட்டு இன்னிசை முழங்குகிறது.

பிறக்கும்பொழுது குழந்தை அழுகிறது; பக்கத்திலுள்ளவர்கள் சிரிக்கிறார்கள். அதே பாலகன் பருவமடைந்து, வளர்ந்து மனிதனாகி, வயோதிபனாகி இறக்கும்பொழுது சிரிக்கிறது; அண்மையில் உள்ளவர்கள் அழுது, கண்ணீர் வடிக்கிறார்கள்.

அழுவது பாதி சிரிப்பது பாதி; இதுதான் உலக நியதி.

கண்ணீர் கண்மணிகளின் ஆயுதம் என்றான் மகாகவி சேக்ஸ்பியர்.

### கண்ணீர் மனிதனின் சொத்து:

உலகில் உதித்த எந்த மனிதனும் வாழ்க்கையின் ஒரு கட்டத்திலாவது அழுதிருப்பான்; இதற்கு இயற்கையே எடுத்துக்காட்டு, மனித வரலாறே ஓர் உதாரணம். ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும் என்ற பொன்மொழியைப் பாரெங்கும் பறைசாற்றிய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தமிழர்கள்.

சற்று உங்கள் இல்லத்தை நோக்குங்கள்: வீதியிலேயும், சாலையிலேயும் சகதிகளிலேயும் உள்ள ஏழைகளை நோக்குங்கள்: குழிவிழுந்த கண்கள், கூனிப்போன உடம்பு, உலர்ந்த உதடுகள், ஒடிந்துபோன தோள்கள். உலகின் முதுகெலும்பு என அழைக்கப்படும் பாட்டாளி மூட்டை தூக்கி அவனது முதுகெலும்பு பிறைபோல் வளைந்து கிடக்கிறது. நானிலத்தின் நாடி நரம்பு அயர்ந்துபோய், கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கும் கோரக்காட்சியைக் காண்கிறோம்.

### ஏன் அழுகிறோம்?

வாழ்க்கை வளமில்லாமல் இருக்கும்பொழுது, வாழ்க்கையில் தேவை மிகுதியாயிருக்கும்பொழுது அழுகிறோம். இது சுயநலக் கண்ணீராகும். தன்னலமற்ற கண்ணீரும் உண்டு. மற்றவர்களின் துன்பத்திலே பங்கு கொண்டு கண்ணீர்த் திவலைகள் சொரிவது; நாட்டுக்காக அழுவது — இவைகள் தன்னலமற்ற கண்ணீராகும். நாட்டுக்காக, நாட்டின் நன்மைக்காக யாரும் அழுததுண்டா? வரலாற்றிலே நீங்கள் படித்ததுண்டா? நாம் இன்று நற்செய்தியிற் படிக்கிறோம், அன்று கிறீஸ்து அழுதாரென்று. விவிலிய நூலைப் படிக்கும்பொழுது கிறிஸ்து இருமுறை அழுததாக அறியவருகிறோம்.

ஒருமுறை பெத்தானியாவிலுள்ள இலாசறஸ் இறந்தபொழுது அழுதார். மறுமுறை யெருசலேம் நகரை நோக்கிக் கண்ணீர் சிந்தினார். கிறிஸ்துவின் முதல் அழுகை அவரது அன்பை எடுத்துக்காட்டுகிறது. இரண்டாவது கண்ணீர் அவரது நாட்டுப் பற்றை நன்கு புலப்படுத்துகிறது.

### நாட்டுப்பற்று:

"சொந்த நாட்டிலே தீர்க்கதரிசிக்கு மதிப்பு இல்லை" என்ற யேசு தமது நாட்டை வெறுக்கவில்லை. மாறாக அதற்கு நன்மை செய்தார். அதை நேசித்தார். வரிசெலுத்தத் தவறவில்லை. "சேசாருக்குரியதை சேசாருக்கும், கடவுளுக்குரியதைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்று பணித்தயேசு யெருசலேமின் ஆன்மீக முன்னேற்றத்தை விரும்பினார். அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டார். அம்மக்களின் மனமோ பண்படையவில்லை. பக்குவமடையவில்லை. உள்ளமோ திருந்தவில்லை. இந்த அவல நிலையை அறிந்த யேசு யெருசலேமின் ஆத்மீக வறுமையைப் பார்த்து கண்ணீர்வடித்தார். "கோழி தன் குஞ்சுகளைச் சிறகினுள் அணைப்பது போன்று நான் உன்னை அணைத்தேன்; நீயோ என் வருகையை அறியவில்லை."

கண்ணின் மணிகளே, கண்ணீர்த் துளிகளே, உனது ஆன்மா என்ற நிலத்திலே அண்ணல் யேசு அளப்பரிய அருள் என்னும் விதைகளைத் தூவினார். தமது கண்ணீர் என்னும் தண்ணீரைப் பாய்ச்சினார். நீ ஒரு நறுமணமுள்ள மலராய், நாற்றிசையும் அம் மணத்தைப் பரப்பினீரா? ஓர் உத்தம கிறிஸ்தவனாக வாழ்ந்தீரா? வளமையுள்ள இளமையை வறுமையாக்கினாயா? அன்று யெருசலேம் நகரின் வீதியிலே அழுது புலம்பிய பெண்களுக்குக் கூறிய அதே வார்த்தைகளை உங்களுக்கும் கூறுகிறார். யெருசலேமின் குமாரத்திகளே, எனக்காக அழவேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்.

வீறுநடைபோட்டு, பெருமிதத்துடன் காட்சியளிக்கும் இளைஞர் சமுதாயமே, ஏழைகளின் கண்ணீர் துடைக்க ஏறுபோல் எழும்பு!

# மறைபரப்பு நாடுகளிலுள்ள மாறுபட்ட நிலைகள்



இன்று மறைபரப்பு நாடுகளிற் பல்வேறு நிலைகள் காணப்படுகிறது. வறுமை, பசிப்பிணி, நோய், துன்பம் ஆதியன ...... எம் நாட்டிலேயே வாழும் ஒரு பெண்ணின் மனக்கசப்பும் நம்பிக்கையிழந்த தன்மையும் அவள் முகத்திற் தோன்றுவதை இப்படத்திற் காணலாம். இத்தகையோரது துன்பத்தைத் துடைக்க முன்வரமாட்டீர்களோ? மறைபரப்பு ஞாயிறன்று பரி. தந்தையின் மறைபரப்புப் பணிக்குக் கொடுக்கும் காணிக்கை நம் நாட்டிலும், பிறநாடுகளிலும் வாழும் வறியவருள் வறியவருக்குக் கொடுப்பதாகும். இப்படம் உங்கள் உள்ளத்தை உருக்குமாயின் இப் பெண்ணின் பெயரால் உங்கள் காணிக்கை சிறிதாயினும் தேசிய அதிபரிடன் இன்றே அனுப்பிவிடுங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1969 ஆம் ஆ ஐப்பசிமீ 18ஆம் உ சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. ... "கத்தோலிக்க பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org